வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959 Reg. No. : P. 1632 விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu ஈழநாடு




Email : eelanaduweekly@gmail.com மலர் : 06 27.02.2025 வியாழக்கிழமை இதழ் : 58 பக்கங்கள் : 12

# உள்ளக பொறிமுறையை நாம் வலுப்படுத்துவோம்!

## ஜெனிவாவில் அறிவித்தது அரசாங்கம்

- பொறுப்புக்கூறத்தக்க ஆட்சியை ஏற்படுத்துவோம்
- வட, கிழக்கு மக்களும் அரசுக்கு ஆணை வழங்கினர்
- வடக்கு, கிழக்கு மேம்பாட்டுக்காக அரசு அர்ப்பணிப்பு



ஜெனிவா, பெப்ரவரி 27

**"காணாமல் போனோர் பற்றிய அலுவலகம் (ஓ. எம். பி.) இழப்பீட்டுக்கான அலுவலகம், தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்க அலுவலகம் உள்ளிட்ட உள்ளக பொறிமுறைகள் மேலும் வலுப்படுத்தப்படும். அவற்றின் சுயாதீனம் - நம்பகத்தன்மை வாய்ந்த முறைமையிலான இயங்குகை என்பன உறுதிப்படுத்தப்படும்", - இவ்வாறு வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் ஜெனிவாவில் தெரிவித்துள்ளார்.**

ஐ. நா. மனித உரிமைகள் பேரவையின் 58ஆவது கூட்டத் தொடர் ஜெனிவாவில் நடக்கிறது. இதில், நேற்றுமுன்தினம் வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் உரையாற்றினார். இதன்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு,

நாட்டில் சில மாதங்களுக்கு முன்னர் நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தல் முக்கியத்துவம் வாய்ந்தது. நாட்டின் அனைத்து பகுதிகளிலிருந்தும் - வடக்கு, தெற்கு, கிழக்கு, மேற்கு மற்றும் அனைத்து இனங்கள்,

11

## நாமலிடம் 5 மணிநேரம் சி.ஐ.டியினர் விசாரணை!

கொழும்பு, பெப். 27

குற்றப் புலனாய்வு திணைக்களத்தில் (சி. ஐ. டி.) நேற்று முன்னிலையான நாமல் ராஜபக்ஷ எம். பியிடம் சுமார் 5 மணி நேரம் விசாரணை நடத்தப்பட்டது.

சர்ச்சைக்குரிய எயார்பஸ் ஒப்பந்தம் தொடர்பிலேயே பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷவிடம் நேற்று புதன்கிழமை விசாரணை நடத்தப்பட்டது.

நேற்று காலை 9 மணியளவில் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் முன்னிலையான நாமல் ராஜபக்ஷ பிற்பகல் 2.15 மணியளவில் வெளியேறினார்.

11

## இந்திய மீனவருக்கு எதிராக யாழில் இன்று போராட்டம்!

யாழ்ப்பாணம், பெப். 27

இலங்கை கடல் எல்லைக்குள் அத்துமீறி நுழையும் இந்திய இழுவை படகுகளை தடுத்து நிறுத்த வேண்டும் என்று வலியுறுத்தி இன்று வியாழக்கிழமை யாழ்ப்பாணத்தில் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

தீவக கடற்றொழில் அமைப்பின் ஏற்பாட்டில் நடைபெறும் இந்தப் போராட்டம் இன்று காலை 9 மணியளவில் யாழ்ப்பாணம் பண்ணையிலுள்ள கடல்வள நீரியல் திணைக்களம் முன்பாக ஆரம்பமாகும்.

தொடர்ந்து, அங்கிருந்து மீனவர்கள் பேரணியாக ஆளுநர் அலுவலகத்துக்கு சென்று


11

## தென்னிலங்கையில் நேற்றும் துப்பாக்கிச்சூடு

கொழும்பு, பெப். 27

தென்னிலங்கையில் நேற்று புதன்கிழமையும் துப்பாக்கிச்சூடு ஒன்று இடம்பெற்றுள்ளது. இதில், ஒருவர் படுகாயமடைந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர். கம்பஹா - மினுவாங்கொடை - பத் தண்டுவன பிரதேசத்திலேயே இந் தத் துப்பாக்கிச்சூடு இடம் பெற்றுள்ளது.

11



பஞ்ச ஈச்சரங்களில் ஒன்றான கீரிமலை நகுலாம்பிகை சமேத நகுலேஸ் வர பெருமான் ஆலய தேர்த்திருவிழா மகா சிவராத்திரி தினமான நேற்று நடைபெற்றவேளை....! (படம் - பு. கஜிந்தன்)

## 9 கட்சிகளின் இணைவு; கூட்டணிக்குள் குழப்பம்!

### ஐங்கரநேசனின் கட்சி முடிவில்லை தமிழ் மக்கள் கூட்டணி இழுபறிநிலை

யாழ்ப்பாணம், பெப். 27

நடைபெறவுள்ள உள்ளூராட்சி சபைத் தேர்தலில் 9 கட்சிகள் இணைந்து ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியாக போட்டியிடுவதில் குழப்பம் ஏற்பட்டுள்ளது. கூட்டணிக்குள் சந்திரகுமார் தலைமையிலான சமத்துவ கட்சியின் வருகையே கூட்டணி குழப்பத்துக்குக் காரணம் என்று கூறப்படுகின்றது.

ஐங்கரநேசன் தலைமையிலான தமிழ்த் தேசிய

11

## 12 ஆயிரம் பேர் படையிலிருந்து தப்பியோட்டம்!

கொழும்பு, பெப். 27

இராணுவத்திலிருந்து கடந்த 10 வருடங்களில் 12 ஆயிரம் பேர் தப்பியோடியுள்ளனர் என்று படைத் தரப்பு தகவல்கள் தெரிவிக்கின்றன.

இவ்வாறு தப்பிச் சென்றவர்களில் ஒரு பகுதியினர்

11

## யாழ். போதனா மருத்துவமனையின் மருத்துவர்கள் இன்று புறக்கணிப்பு!

யாழ்ப்பாணம், பெப். 27

5 அம்சக் கோரிக்கையைமுன் வைத்து யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை மருத் துவர்கள் இன்று வியாழக்கிழமை முதல் பணிப்புறக்கணிப்பில் ஈடுபடவுள்ளனர்.

மருத்துவமனை நிர்வாகத்துக்கு எதிராகவே இந்தப் பணிப் புறக்கணிப்பு நடைபெறவுள்ளது. இது தொடர்பில், யாழ். போதனா மருத்துவமனையின் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தினர் விடுத்துள்ள

11

## வட, கிழக்கில் இன்றுமுதல் தீவிரமான மழை கிடைக்கும்

யாழ்ப்பாணம், பெப். 27

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இன்று வியாழக்கிழமை முதல் எதிர்வரும் மார்ச் 3ஆம் திகதி வரை சற்று தீவிரமான மழை கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுவதாக காலநிலை அவதானிப்பாளரும் யாழ். பல்கலைக்கழக புவியியல் துறை தலைவருமான நா. பிரதீபராஜா தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் குறிப்பிடுகையில், தென்கிழக்கு வங்காள விரிகுடாவில்

11

## ரணில் இன்று இந்தியா பயணம்!

கொழும்பு, பெப். 27

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இன்று வியாழக்கிழமை இந்தியா பயணமாகிறார்.

"உலகளாவிய விசேட முன்னேற்றங்கள்" குறித்த மாநாடு நாளை வெள்ளிக்கிழமை புதுடில்லியில் ஆரம்பமாகிறது. இதில், இந்திய பிரதமர் நரேந்திர மோடி, கனடாவின் முன்னாள் பிரதமர் ஸ்டீவன் ஹாபர், அவுஸ்திரேலியாவின்

11

## பெருந்துடுப்பாட்ட போட்டிகள் மழையால் ஒத்திவைக்கப்பட்டன!

யாழ்ப்பாணம், பெப். 27

யாழ்ப்பாணத்தில் இன்று வியாழக்கிழமை நடைபெறவிருந்த வடக்கின் பெரும்போர், பொன் அணிகளின் போர் ஆகிய பெருந்துடுப்பாட்ட போட்டிகள் சீரற்ற காலநிலையால் பிற்போடப்பட்டுள்ளன.

வடக்கின் பெரும் போர் என்று வர்ணிக்கப்படும்

11

## ஷெல் நிறுவனமும் எரிபொருள் விற்பனையை ஆரம்பித்தது!

கொழும்பு, பெப். 27

அமெரிக்க நிறுவனம் ஆர். எம். பார்க்ஸ் ஷெல் நிறுவனம் தனது முதலாவது எரிபொருள் நிலையத்தை கொழும்பு - அம்பத்தலை பகுதியில் நேற்று திறந்து வைத்தது.

இந்த நிகழ்வில், அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் பங்கேற்றிருந்தார்.

11

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருக்கேதீச்சரம் ஆலயத்தில் மகா சிவராத்திரி சிறப்பு!

## பல இலட்சம் பக்தர்கள் திரள்வு

மன்னார், பெப். 27

வரலாற்றுப் பிரசித்தி பெற்றதும் பாடல் பெற்ற தலமுமான மன்னார் திருக்கேதீச்சரம் ஆலயத்தில் மகா சிவராத்திரி விரத தினம் நேற்று சிறப்பாக கடைப்பிடிக்கப்பட்டது.

நேற்றைய தினம் நாடு முழுவதும் இருந்து மட்டுமல்லாது உலகின் பல்வேறு நாடுகளிலிருந்தும் பல இலட்சக்கணக்கான பக்தர்கள் பங்கேற்றனர்.

சிவராத்திரி தினமான நேற்று அதிகாலை முதல் பக்தர்கள் திருக்கேதீச்சரம் ஆலயத்தின் பாலாவி தீர்த்தத்தில் நீராடி, தண்ணீர் எடுத்து வந்து சிவலிங்கத்துக்கு அபிஷேகம் செய்து நெய் விளக்கு ஏற்றி நேர்த்திக்கடன்களை நிறைவேற்றினர்.

நேற்று முழுவதும் ஆலயத்தில் சிறப்பு பூசை வழிபாடுகள் நடைபெற்றன. அத்துடன், ஆலய சூழலும் பல்வேறு நிகழ்வுகள் நடைபெற்றன.

மகா சிவராத்திரியை ஒட்டி விசேட போக்குவரத்து சேவைகள், குடிதண்ணீர், சுகாதாரம் உள்ளிட்ட அத்தியாவசிய வசதிகளும் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தன. இதே நேரம், ஆலய சூழலில் பலத்த பாதுகாப்பும் வழங்கப் பட்டிருந்தது.

(ஐ)

# உள்ளூராட்சி சபை தேர்தலில் தமிழ் அரசு தனித்தே போட்டி

## சுமந்திரன் அறிவிப்பு

வடமராட்சி, பெப். 27

உள்ளூராட்சி சபைத் தேர்தலில் தமிழ் அரசுக் கட்சி தனித்துப் போட்டியிடும் என்று அந்தக் கட்சியின் பதில் செயலாளர் ஜனாதிபதி சட்டத்தரணி எம். ஏ. சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

வடமராட்சி ஊடக மையத்தில் நேற்று முன்தினம் அவர் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே இதனைத் தெரிவித்தார்.

மேலும், உள்ளூராட்சி சபைத் தேர்தலில், நாம் ஏற்கனவே எடுத்துக்கொண்ட தீர்மானத்துக்கு அமைவாக தனித்துப் போட்டியிடுவோம். சபைகளில் ஆட்சி அமைக்கும்போது, கூட்டாக ஆட்சி அமைக்க முடியும். இது தொடர்பாக எமது கட்சித் தலைவர் தமிழ்த் தேசிய கட்சிகளுடன் பேச்சுகளில் ஈடுபட்டுள்ளார் என்றும் சுமந்திரன் கூறினார்.

(ஐ-02)

# சட்டவிரோத மணல் அகழ்வு; இருவர் கைது!



யாழ்ப்பாணம், பெப். 27

சட்டவிரோத மணல் அகழ்வில் ஈடுபட்ட இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சாவகச்சேரி பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கோயிலாக்கண்டி பகுதியிலேயே மணல் அகழ்வின்போது இருவரும் கைது செய்யப்பட்டனர். இதன்போது, மணல் அகழ்வுக்கு பயன்படுத்தப்பட்ட உழவு இயந்திரமும் மீட்கப்பட்டது.

சந்தேகநபர்களை விசாரணைகளின் பின்னர் சாவகச்சேரி நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

(ஐ-05)

# கோப்பாயில் விபத்தின் பின்னர் தப்பிச்சென்ற வாகனம் சிக்கியது!

யாழ்ப்பாணம், பெப். 27

கோப்பாயில் மரண ஊர்வலத்தில் விபத்தை ஏற்படுத்திவிட்டு தப்பிச் சென்ற வாகனத்தை பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

கடந்த 21ஆம் திகதி கோப்பாய் - கைதடி வீதியில் இந்த வாகனம் விபத்தை ஏற்படுத்தியதில் ஒருவர் சம்பவ இடத்தில் உயிரிழந்தார். ஐவர் படுகாயமடைந்தனர். இதைத் தொடர்ந்து வாகனம் அங்கிருந்து தப்பிச் சென்றிருந்தது.

தப்பிச் சென்ற வாகனம் தச்சன்தோப்பு பகுதியில் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் யாழ்ப்பாணம் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் கீழ் இயங்கும் பொலிஸ் புலனாய்வு பிரிவினரால் கைப்பற்றப்பட்டது.

இதேவேளை, வாகனத்தின் உரிமையாளர் கைது செய்யப்படவில்லை. அவர் தலைமறைவாகிவிட்டார் என்று கூறப்படுகின்றது. மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

(ஐ)

# கச்சதீவு திருவிழா செலவாக கடற்படைக்கு ரூ. 3.2 கோடி!

யாழ்ப்பாணம், பெப். 27

கச்சதீவு அந்தோனியார் ஆலய திருவிழா ஒழுங்கமைப்பு பணிகளுக்கு செலவிடுவதற்காக 3 கோடியே 20 இலட்சம் ரூபாய் கடற்படையினருக்கு வழங்கப்பட்டுள்ளது.

கச்சதீவு அந்தோனியார் ஆலய திருவிழா வரும் 14, 15 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது. இதில் இலங்கை மற்றும் இந்திய பக்தர்கள் உட்பட 9 ஆயிரம் பேர் கலந்து கொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்தத் திருவிழாவில் கலந்து கொள்ள வருவோருக்கான உணவு , குடிதண்ணீர் வசதிகள், மலசலகூட வசதிகள் உள்ளிட்ட அடிப்படை வசதிகளை ஏற்படுத்தவும் அரச அதிகாரிகள், பெருவிழாவுக்கான ஏற்பாட்டாளர்கள் உள்ளிட்டவர்களுக்கான போக்குவரத்து, தங்குமிட வசதிகளை வழங்கவுமென கடற்படையிடம் 3.2 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளதாக யாழ். மாவட்ட செயலக தகவல்கள் தெரிவித்தன.

(ஐ)



பண்டத்தரிப்பு - வடலியடைப்பு - அரசடி புற்றடி ஆதி சங்கரி சமேத ஆதிசங்கரன் ஆலய தேர்த் திருவிழா மகா சிவராத்திரி தினமான நேற்று நடைபெற்றது.

# காலாவதியான குளிர்பானம்; ரூ. 30,000 வர்த்தகருக்கு தண்டம்!

யாழ்ப்பாணம், பெப். 27

காலாவதியான குளிர்பானங்களை விற்பனைக்காக வைத்திருந்த வர்த்தகருக்கு 30 ஆயிரம் ரூபாய் தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது.

திருநெல்வேலில் அமைந்துள்ள வர்த்தக நிலையம் ஒன்றுக்கே இவ்வாறு தண்டப் பணம் விதிக்கப்பட்டுள்ளது.

பொது சுகாதார பரிசோதகர்கள் அண்மையில் நடத்திய சோதனையில், வர்த்தக நிலையம் ஒன்றில் காலாவதியான குளிர்பானங்களை விற்பனைக்காக காட்சிப்படுத்தியிருந்தமை கண்டறியப்பட்டது.

இதையடுத்து, அந்த வர்த்தகருக்கு எதிராக யாழ். மேலதிக நீதிவான் நீதிமன்றில் வழக்கு தொடரப்பட்டது.


இந்த வழக்கு நேற்றுமுன்தினம் விசாரணைக்கு எடுக்கப்பட்டது. இதன்போது, வர்த்தகர் தன்மீதான குற்றத்தை ஏற்றுக்கொண்டார். இதையடுத்து, அவரை கடுமையாக எச்சரித்த நீதிவான் 30 ஆயிரம் ரூபாய் தண்டப்பணம் விதித்துத் தீர்ப்பளித்தார்.

(ஐ)

# கசிப்புடன் ஒருவர் கைது!

யாழ்ப்பாணம், பெப். 27

கோண்டாவிலில் நீண்ட காலமாக கசிப்பு உற்பத்தி மற்றும் விற்பனையில் ஈடுபட்டு வந்த 42 வயதுடைய சந்தேக நபரை கோப்பாய் பொலிஸார் கைது செய்துள்ளனர். அவரிடமிருந்து ஒன்றரை லீற்றர் கசிப்பும் கைப்பற்றப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.



யாழ்ப்பாணம் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் கீழ் இயங்கும் பொலிஸ் புலனாய்வு பிரிவினருக்குக் கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையிலேயே சந்தேகநபர் கைது செய்யப்பட்டார்.

சந்தேகநபரை யாழப்பாணம் நீதிமன்றில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

(ஐ-05)



# தருமபுரம் ஆயுள்வேத வைத்தியசாலையை மக்கள் பாவனைக்கு வழங்கக் கோரிக்கை

கிளிநொச்சி, பெப். 27

கிளிநொச்சி - தருமபுரத்தில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட ஆயுள்வேத மருத்துவமனை ஏழு வருடங்கள் கடந்த நிலையிலும் மக்கள் பாவனைக்கு கையளிக்கப்படவில்லை. அத்துடன், அது, கால்நடைகளின் தங்குமிடமாகவும் பற்றைக் காடாகவும் காட்சியளிக்கின்றது.

இந்த ஆயுள்வேத வைத்தியசாலை கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட 16 கிராம மக்களின் பயன் தரக் கூடிய வகையில் நிர்மாணிக்கப்பட்டது. எனினும், நிர்மாணிக்கப்பட்டு 7 வருடங்கள் கடந்தும் இது மக்கள் பாவனைக்கு வழங்கப்படவில்லை.

இந்த வைத்தியசாலை மக்கள் பாவனைக்கு கையளிக்கப்படாததால் இந்தப் பகுதிகளின் மக்கள் புதுக்குடியிருப்பு அல்லது பரந்தனிலுள்ள வைத்தியசாலைகளுக்கு செல்ல வேண்டியுள்ளது. இதனால், வீண் அலைச்சலும் பணச்செலவும் ஏற்படுவதாக மக்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

(ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
27.02.2025 வியாழக்கிழமை
பிலவ வருடம், மாசி 15

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

## எதிர்காலத்தை நோக்குதல்...!

கடந்த ஞாயிற்றுக்கிழமை, டான் தொலைக்காட்சியில் ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி மார்க் அன்றோ பிரான்சேயின் நேர்காணல் நடைபெற்றது. இந்த உரையாடலின்போது அவர் பல்வேறு விடயங்களைப் பகிர்ந்து கொண்டிருந்தார். இதன்போது அவர் குறிப்பிட்டிருந்த ஒரு விடயம் கவனத்துடன் நோக்க வேண்டியதாகும். அதாவது, ஐந்து வருடங்களில் இலங்கையின் வறுமை இரண்டு மடங்காகும் என்று அவர் குறிப்பிடுகின்றார்.

அவர் ஆய்வுகளின் அடிப்படையில்தான் அவ்வாறு கூறுகின்றார். ஏற்கனவே, பொருளாதார நெருக்கடியில் சிக்கிக் கிடக்கும் இலங்கை அரசியல் ரீதிதியிலும் சமூக ரீதியிலும் பெரும் நெருக்கடிகளை எதிர்கொண்டிருக்கின்றது. இந்த நிலையில் வறுமை நிலை இரண்டு மடங்காக அதிகரிக்கும் சூழல் உருவாகுமாயின், அதன் அரசியல் விளைவுகளும் மிகவும் மோசமானவையாக இருக்கும். சமூகக் கட்டமைப்புகளும் நிலைகுலைந்து போகும் ஆபத்து ஏற்படும்.

இந்த நிலைமை அனைத்து மக்களுக்கும் உரியது. அனைத்தையும் வெறும் தமிழ்த் தேசியம் என்னும் கண்ணாடி கொண்டு நோக்குவதையே அறிவென்றும் இன உணர்வு எனவும் எண்ணிக் கொண்டிருக்கும் நமது சூழலில் வழமையான பார்வைக்கு வெளியில் சென்று விடயங்களை நோக்கும் போக்கு அவசியமானது. வடக்கு, கிழக்கில் மக்கள் அதிக வறுமையை எதிர்கொள்ளும் நிலைமை ஏற்பட்டால் அது அரசியல் ரீதியிலும் சமூக ரீதியிலும் பலவாறான நெருக்கடிகளை ஏற்படுத்தும்.

நாடு பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்ட சந்தர்ப்பத்திலும் அது தமிழ் மக்களை பாதிக்கவில்லை. தமிழ் மக்கள் இதனை விடவும் மோசமான நிலைமையை யுத்த காலத்தில் எதிர்கொண்டிருந்தவர்கள். அவர்கள் இதுபற்றி அலட்டிக் கொள்ளவில்லை - என்றவாறான கதைகளே புனையப்பட்டன. தமிழ் ஊடகப் பரப்பிலும் அவ்வாறான பார்வைகளுக்கே முன்னுரிமையளிக்கப்பட்டன. ஆனால், உண்மையோ வேறு.

தமிழ் மத்தியதர வர்க்கத்தினர் அதிகம் புலம்பெயரும் ஆசையோடு அலைகின்றனர். ஏழை மக்களோ பொருளாதார சுமையை சுமக்க முடியாமல் தடுமாறுகின்றனர். தமிழ் சமூகத்தின் இளைய தலைமுறையின் எதிர்பார்ப்புகளோ பெரியளவில் மாறிவிட்டது. முள்ளிவாய்க்கால், இனப்படுகொலை, இன ஒடுக்குமுறை இவ்வாறான சொற்களின் வழியாக இன்றைய இளைய தலைமுறையை இனியும் திருப்திப்படுத்த முடியாது.

இந்த விடயங்களைக் கருத்தில்கொண்டு வடக்கு, கிழக்கில் பொருளாதார மேம்பாட்டுக்கான வாய்ப்புகளை ஏற்படுத்துவது தொடர்பில் தமிழ் தலைமைகள் என்போர் சிந்தித்து செயலாற்ற வேண்டும். தேர்தலில் வெற்றிபெறுவதற்கான கூட்டுகள் தொடர்பில் சிந்திக்கும் கட்சிகள், வாக்களிக்கும் மக்கள் நம்பிக்கையுடன் நிலத்தில் வாழ்வதற்கான வழிவகைகளை மேற்கொள்ள வேண்டும். அதற்கான பொருளாதாரத் திட்டங்களை வகுக்க வேண்டும்.

தமிழ்க் கட்சிகளின் தலைமைகள் என்போர் அனைவருமாக ஒனறிணைந்து வடக்கு - கிழக்கில் உள்ள பொருளாதார சவால்கள் என்ன? - அதனை எவ்வாறு எதிர்கொள்ளலாம்? - அதற்கான ஒன்றிணைந்த வேலைத்திட்டம் என்ன என்பது பற்றி ஒருபோதும் சிந்தித்ததில்லை. இனியாவது சிந்திக்க முற்படுங்கள். நீங்கள் வடக்கு, கிழக்கு தமிழ் மக்களை உண்மையிலேயே பிரதிநிதித்துவம் செய்வது உண்மையாயின்.

## ஞானச்சுடர் வாசகர் போட்டியில் பரிசு பெற்றோர் விவரம் வெளியீடு

யாழ்ப்பாணம், பெப்.27

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டு பேரவையால் மாதந்தோறும் வெளியிடப்பட்டு வரும் ஞானச்சுடர் ஆன்மீக சஞ்சிகை நடத்திய வாசகர் போட்டியில் பரிசு பெற்றோர் விவரம் வெளியிடப்பட்டுள்ளது.

இப் போட்டியில் முதல் பரிசை ஆவரங்காலைச் சேர்ந்த ஆ. ருக்குமணிதேவியும், இரண்டாம் பரிசை வல்வெட்டித்துறையைச் சேர்ந்த திருமதி ம. சிறீஸ் கந்தராசாவும், மூன்றாம் பரிசை அல்வாயைச் சேர்ந்த யுவராஜ் பிறேமினியும் பெற்றுள்ளனர்.

இப்போட்டியில் வெற்றியீட்டியவர்களுக்கான பரிசில்கள் நாளை 28 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 10.00 மணிக்கு மாசி மாத ஞானச்சுடர் சஞ்சிகை வெளியீட்டின் போது வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் செ. மோகனதாஸ் சுவாமிகள் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் சிறுவர் உரிமை மேம்பாட்டு உத்தியோகத்தர் திருமதி சிந்துரா கலியுகநாதன் வெளியீட்டுரையையும் ஓய்வு நிலை ஆசிரியர் திருமதி புனிதவதி சண்முகம் மதிப்பீட்டுரையையும் நிகழ்த்துவர். (எ-02)

## யானைகள் ரயில்களில் மோதுவதை தடுப்பதற்காக ஏ.ஐ. தொழில்நுட்பம்!

கொழும்பு, பெப். 27

யானைகள் ரயில்களில் மோதுவதைத் தடுக்க ஏ.ஐ. தொழில்நுட்பம் மற்றும் பிற புதிய தொழில்நுட்ப சாதனங்களை அவசரமாகப் பயன்படுத்துவது குறித்து சுற்றுச்சூழல் அமைச்சில் கலந்துரையாடல் நடைபெற்றது.

அண்மைய தினங்களாக ரயில்களில் யானைகள் மோதும் சம்பவங்கள் அதிகரித்து வருகின்றன, அரசாங்கம் இதுபோன்ற சம்பவங்களை முன்கூட்டியே கண்டறிந்து நடைமுறை தீர்வுகளைக் கண்டறிய பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

அதன்படி, பேராதனைப் பல்கலைக்கழகம் உட்பட பல அரச பல்கலைக்கழகங்களால் அடையாளம் காணப்பட்ட அண்மைய தொழில்நுட்பங்கள் மற்றும் சாதனங்கள் குறித்த விழிப்புணர்வு நிகழ்வு இதன்போது நடைபெற்றது.

அந்த தொழில்நுட்பத்தை விரைவாக நடைமுறை பயன்பாட்டுக்கு கொண்டு வர தொடர்புடைய நிறுவனங்களுக்கு தெரிவிப்பதாகும் இந்த கலந்துரையாடலின் நோக்கமாக அமைந்திருந்தது. (அ)

## 247 கிலோ கஞ்சாவுடன் ஒருவர் கைது!

சிலாபம், பெப். 28

247 கிலோ கஞ்சாவை காரில் கடத்திச் சென்ற ஒருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

புத்தளம் பிராந்திய ஊழல் தடுப்பு பிரிவுக்கு கிடைத்த தகவலுக்கு அமைய நேற்று முன்தினம் இரவு புத்தளம் - சிலாபம் வீதியில் பயணித்துக் கொண்டிருந்த காரை பொலிஸார் மறித்து சோதனையிட்டனர். இதன்போதே இந்தக் கஞ்சா சிக்கியது.

காரின் பின்பகுதியில் சூட்சுமமான முறையில் 114 பொதிகளில் வைக்கப்பட்டிருந்த கஞ்சாவை அதிகாரிகள் கைப்பற்றினர்.

இதன்போது, 247 கிலோ 946 கிராம் கஞ்சா கைப்பற்றப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர். சம்பவம் தொடர்பில் கார் சாரதி கைது செய்யப்பட்டுள்ளார்.

கைதான சந்தேகநபர் 36 வயதுடைய திம்பில்லே பகுதியை சேர்ந்தவராவார். (ஐ)

## மது போதையில் பாடசாலை பஸ்ஸை செலுத்திய சாரதி கைது

கொழும்பு, பெப். 27

குருநாகல், குளியாப்பிட்டி பிரதேசத்தில் மது போதையில் பாடசாலை பஸ்ஸை செலுத்திய தாகக் கூறப்படும் பஸ் சாரதி ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக குளியாப்பிட்டி பொலிஸார் தெரிவித்தனர்.


பாடசாலை மாணவர்களை ஏற்றிச் செல்லும் தனியார் பஸ் ஒன்று கவனக்குறைவாகப் பயணிப்பதாக குளியாப்பிட்டி பொலிஸாருக்கு தகவல் கிடைத்துள்ளது.

பின்னர், பொலிஸ் அதிகாரிகள் சிலர் இணைந்து குறித்த பஸ்ஸை சோதனையிட்டபோது சாரதி மது போதையில் இருப்பது தெரியவந்துள்ளது.

இதனையடுத்து, 37 வயதுடைய பஸ் சாரதி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். பின்னர், பஸ்ஸில் பயணித்த பாடசாலை மாணவர்களை ஏனைய வாகனங்கள் மூலம் பாதுகாப்பாக வீடுகளுக்கு அனுப்பி வைப்பதற்கு பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

இது தொடர்பில் குளியாப்பிட்டி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ)


## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு






**மேடம்**
எதிர்பார்ப்புகள் நிறைவேறும். உறவினர் நண்பர்களுடன் மனம் விட்டு பேசுவீர்கள். மற்றவர்களுக்காக சில செலவுகளை செய்து பெருமைப்படுவீர்கள். மதிப்புக் கூடும் நாள்.

**இடபம்**
கணவன்-மனைவிக்குள் இருந்த பிணக்குகள் நீங்கி மகிழ்ச்சி அதிகரிக்கும். சுப நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வீர்கள். எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். திடீர் திருப்பம் நிறைந்த நாள்.

**மிதுனம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் வேலைச்சுமை இருந்துக் கொண்டேயிருப்பதாக ஆதங்கப்படுவீர்கள். சிலர் உங்களிடம் நயமாகப்பேசினாலும் சொந்த விஷயங்களை பகிர்ந்துக் கொள்ள வேண்டாம்.

**கடகம்**
கடினமான காரியங்களை எளிதாக முடிப்பீர்கள். சகோதர வகையில் ஒற்றுமை பிறக்கும். கல்யாணப் பேச்சு வார்த்தை சாதகமாக முடியும். மனைவி வழியில்நல்ல செய்தி உண்டு.

**சிம்மம்**
பணப்புழக்கம் அதிகரிக்கும். உறவினர் நண்பர்கள் உங்களை கலந்தாலோசித்து சிலமுடிவுகள் எடுப்பார்கள். அதிகாரப் பதவியில் இருப்பவர்கள் உதவுவார்கள். அரசால் அனுகூலம் உண்டு.

**கன்னி**
குடும்பத்தின் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவீர்கள். நீண்ட நாள் பிரார்த்தனையை நிறைவேற்றுவீர்கள். உறவினர்களில் உண்மையானவர்களை கண்டறிவீர்கள். கனவு நனவாகும் நாள்.

**துலாம்**
எதிர்ப்புகளையும் தாண்டி முன்னேறுவீர்கள். தாயாருக்கு மருத்துவச் செலவுகள் வந்து போகும். மகளுக்கு நல்ல வரன் அமையும். வரவேண்டிய பணத்தை போராடி வசூலிப்பீர்கள்.

**விருட்சிகம்**
குடும்பத்தில் சுபநிகழ்ச்சிகளில் கலந்து கொள்வீர்கள். அதிகாரப் பதவியில் இருப்பவர்களின் நட்பு கிடைக்கும். அரசால் ஆதாயம் உண்டு. உறவினர்கள் பாராட்டும்படி நடந்து கொள்வீர்கள்.

**தனுசு**
இதுவரை இருந்த சோர்வு களைப்பு யாவும் நீங்கும். குடும்பத்தில் அமைதி திரும்பும். எதிர்பார்த்த இடத்திலிருந்து நல்ல செய்தி வரும்.கேட்ட இடத்தில் உதவிகள் கிடைக்கும்.

**மகரம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் மற்றவர்களை நம்பி முக்கிய முடிவுகள் எடுக்க வேண்டாம். குடும்பத்தில் எதிர்பாராத செலவுகள் வந்துபோகும். சிலர் உங்களை விமர்சித்தாலும் கலங்கி கொண்டே இருக்காதீர்கள்.

**கும்பம்**
விடாப்பிடியாக செயல்பட்டு சில வேலைகளை முடிப்பீர்கள். உறவினர்கள் நண்பர்கள் சிலர் நன்றி மறந்து பேசுவார்கள். திட்டமிடாத செலவுகளை போராடி சமாளிப்பீர்கள்.

**மீனம்**
எந்த பிரச்னையையும் சமாளிக்கும் மனப்பக்குவம் கிடைக்கும். பழைய கடனில் ஒரு பகுதியை பைசல் செய்வீர்கள். அரசாங்க விஷயம் நல்ல விதத்தில் முடியும். சிறப்பான நாள்.

# தறிக்கப்படும் பனை மரங்களுக்கான மீள் நடுகை திட்டம் குறித்து ஆராய்வு

யாழ்ப்பாணம், பெப்.27

பனைமரம் தறிப்பதற்கான கட்டுப்பாட்டுச்சட்டம் மற்றும் அனுமதி தொடர்பாகவும் தறிக்கப்படுகின்ற பனை மரங்களுக்கான மீள் நடுகை செயல் திட்டம் தொடர்பான கலந்துரையாடல் யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபன் தலைமையில் நேற்று முன்தினம் மாவட்ட செயலக அரசாங்க அதிபர் அலுவலகத்தில் நடைபெற்றது.

இதன்போது, கருத்து தெரிவித்த அரசாங்க அதிபர், அனர்த்தம் ஏற்படக்கூடிய பனை மரங்கள் காணப்படுமாயின் அவற்றை ஐந்து பேர் கொண்ட குழுவொன்று அமைத்து அவர்கள் நேரில் சென்று பார்வையிட்டு தறிப்பதற்கான அனுமதி வழங்குதற்கும், அரச வீட்டுத்திட்டம், அரச சார்பற்ற வீட்டுத்திட்டம் என்பவற்றால் பிரதேச செயலகங்களினூடாக வழங்கப்படும் வீட்டுத்திட்டங்களுக்கு நிபந்தனைகளுடன் பனை மரம் தறிப்பதற்கு அனுமதி வழங்குவதற்கும் பனை அபிவிருத்தி சபைக்கு ஆலோசனை வழங்கியதுடன், பனை அபிவிருத்தி சபையால் யாழ். மாவட்டத்தில் பனம் விதை நடுவதற்கான இடங்கள் காணப்படுமாயின் அதற்கான இட அமைவு தொடர்பான விடயத்தை பிரதேச செயலாளர்களை அறிக்கையிடுமாறும் தெரிவித்தார்.

பனை மரம் தறிப்பதற்கான கட்டுப்பாட்டுச்சட்டம் மற்றும் அனுமதி தொடர்பாக பிரதேச செயலாளர்கள் எதிர்கொள்ளும் பிரச்னைகள் மற்றும் அதற்கான உடனடித் தீர்வுகள் தொடர்பான விடயங்களும் இதன்போது ஆராயப்பட்டன.(எ-05)

# பருத்தித்துறை கடலில் சூட்டுப்பயிற்சி!

யாழ்ப்பாணம், பெப்.27

யாழ்ப்பாணம் கடற்றொழில் நீரியல்வளத் திணைக்களம் கடற்றொழிலாளர்களுக்கான அவசர அறிவிப்பு ஒன்றை விடுத்துள்ளதுஎதிர்வரும் 02 ஆம் திகதி காலை 09. 00 மணியிலிருந்து மாலை 05. 00 மணிவரை வடக்கு பருத்தித்துறை கடற்பரப்பிற்கு உயரே இலங்கை கடற்படை கப்பல்களான பி - 423, பி - 433, பி- 483 ஆகிய கலங்களிலிருந்து சூட்டுப்பயிற்சி நடைபெறவுள்ளது.

இந்த நிலையில், மேற்குறிப்பிட்ட கடற்பிரதேச எல்லைக்குள் கடற்றொழிலாளர்கள் பிரவேசிப்பதை தவிர்க்குமாறு யாழ். கடற்றொழில் நீரியல் வளத்திணைக்கள உதவிப்பணிப்பாளரால் அனைத்து கடற்றொழில் சங்கங்களுக்கும் அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

# சமூக வலுவூட்டல் திட்டம் தொடர்பில் உத்தியோகத்தர்களுக்கு செயலமர்வு



யாழ்ப்பாணம், பெப்.27

கிராமிய அபிவிருத்தி சமூக பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சின் ஏற்பாட்டில் சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் சமூக வலுவூட்டல் வேலைத்திட்டம் தொடர்பில் மாவட்ட உத்தியோகத்தர்களுக்கு தெளிவுபடுத்தும் செயலமர்வு யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் ம. பிரதீபன் தலைமையில் நேற்று முன்தினம் மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

சமூக வலுவூட்டல் தேசிய வேலைத்திட்டத்தினூடாக நிலையான மற்றும் உயர்வான வாழ்க்கைத் தரத்தை ஏற்படுத்திக் கொடுக்கும் பொருட்டு குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களை குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் பொருளாதார, சமூக மற்றும் உள ரீதியாக வலுவூட்டுதலை இலக்காகக் கொண்டு இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

மேலும், இந்தத் திட்டத்தை யாழ்ப்பாணத்தில் நடைமுறைப்படுத்த மாவட்ட மட்டத் தில் முன்னெடுக்க வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாகவும் அவை தொடர்பாக மாவட்ட உத்தியோகத்தர்கள் மேற்கொள்ள வேண்டிய செயல்பாடுகள் மற்றும் பயனாளிகள் தெரிவு தொடர்பாகவும் சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் மேலதிக பணிப்பாளர் நாயகம் (திட்டமிடல்) திருமதி ஏ. பாக்கியராஜாவால் தெளிவுபடுத்தப்பட்டது.

இதில், பாராளுமன்ற உறுப்பினர் க. இளங்குமரனும் கலந்துகொண்டார். (எ)





தேசிய கலை இலக்கியப் பேரவையின் ஏற்பாட்டில் யாழ். இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரியில் கடந்த 23 ஆம் திகதி நடைபெற்ற 23 ஆவது புத்தக அரங்க விழாவின் இரண்டாம் நாள் மாலை நிகழ்வின் காட்சிகள்....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீனத் தூதுக் குழு கொழும்பு வந்தது!





கொழும்பு, பெப். 27

**மத்திய மாகாண ஆளுநர் பேராசிரியர் சரத் அபேகோனுக்கும், சீனா மக்கள் குடியரசின் தூதுக் குழுவினருக்குமிடையிலான சந்திப்பொன்று கண்டியிலுள்ள ஆளுநர் காரியாலயத்தில் நடைபெற்றது.**

சீனாவின் தேசிய இனங்கள் ஆணைக்குழு அமைச்சர் பென் யூ தலைமையில் இந்த சீனக் குழுவினர் நாட்டுக்கு வருகை தந்துள்ளனர். இச் சந்திப்பில், மேலும், சுற்றுலாத்துறை அபிவிருத்தி, சுற்றுலாத்துறையினரை கண்டிக்கு அழைத்து வருவது, இரு நாடுகளுக்குமிடையே காணப்படுகின்ற பௌத்த, சமய கலாசார உறவுகளையும் உயர் கல்வித்துறையையும் அபிவிருத்தி செய்வது மற்றும் சீனாவில் மேற்கொள்ளக்கூடிய உயர் கல்விக்கான புலமைப்பரிசில் திட்டம் தொடர்பாக கலந்துரையாடப்பட்டதாக ஆளுநர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

இச்சந்திப்பில், சீனாவின் தேசிய இனங்கள் தொடர்பான ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் வே கொசிங், பணிப்பாளர் கியூ பெங், பிரதிப்பணிப்பாளர் சென் சிங்கொங் மற்றும் சீனாவின் மின்சு பல்கலைக்கழக வெகுஜன தொடர்பு பிரிவின் உதவித் தலைவர் கியூ கியாங் உட்பட பலர் கலந்துகொண்டனர். (அ)

## பாதுகாப்புச் செயலர் பதவியை கோட்டாவுக்கு வழங்கவேண்டும்

### சட்டத்தரணி மனோஜ் கமகே

கொழும்பு, பெப். 27

நாட்டின் பாதுகாப்பு செயலாளர் பதவியை முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவுக்கு வழங்க வேண்டும் என்று சட்டத்தரணி மனோஜ் கமகே தெரிவித்துள்ளார்.

பொதுஜன பெரமுனவின் ஊடக சந்திப்பில் உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

கோட்டாபய ஒரு திறமையான மற்றும் அனுபவமிக்க நபர் என்றும், அவர் நாட்டின் தேசிய பாதுகாப்பை உறுதி செய்துள்ளதாகவும், எனவே அவருக்கு அந்தப் பதவி வழங்கப்பட வேண்டும் என்றும் சட்டத்தரணி மனோஜ் கமகே கேட்டுக் கொண்டார்.

மேலும் கருத்து தெரிவித்த அவர்,முன்னாள் ஜனாதிபதிகள் மகிந்த ராஜபக்ஷ மற்றும் கோட்டாபய ராஜபக்ஷ ஆகியோரின் உயிருக்கு அச்சுறுத்தல் இருப்பதாகவும், ஏனெனில் அவர்கள் கடந்த காலத்தில் நாட்டின் ஒவ்வொரு பிரச்னையிலும் நேரடியாக தீர்மானங்களை எடுத்த தலைவர்கள் .

ராஜபக்ஷ குடும்பத்தின் பெயரைப் பற்றி இவ்வளவு புலம்பாதீர்கள்.

ராஜபக்ஷ குடும்பம் இன்னும் இந்த நாட்டை ஆள்கிறது என்று அரசாங்க அமைச்சர்கள் கூறுகிறார்கள்.

அப்படியானால் அந்த நாற்காலிகளில் இருக்க வேண்டிய அவசியமில்லை, உடனடியாக அந்த நாற்காலிகளில் இருந்து இறங்குங்கள்.

நாட்டின் பாதுகாப்பு அமைச்சை கோட்டாபய ராஜபக்ஷவிடம் ஒப்படைத்து விடுங்கள். ஒரு மாதத்துக்கு அதை ஒப்படைத்து விடுங்கள். அவர் இந்தப் பிரச்னைகளையெல்லாம் தீர்த்து வைப்பார்.

ஏனென்றால், அவர், பாதுகாப்புச் செயலாளராக இந்த நாட்டின் தேசியப் பாதுகாப்பைத் திறமையாக உறுதி செய்த ஒரு தலைவர் .உங்களால் முடியாவிட்டால் புலம்பாதீர்கள், கோட்டபய ராஜபக்ஷவிடம் ஒப்படைத்துவிடுங்கள்-என்றார். (அ)

## வெளிநாடுகளில் இருக்கும் தேடப்படும் குற்றவாளிகள்!

### நாடு கடத்த தயாராகும் அதிகாரிகள்

கொழும்பு, பெப். 27

அதிகரித்து வரும் துப்பாக்கிச் சூடு மற்றும் பாதாள உலகக் குற்றவாளிகள் சம்பந்தப்பட்ட குற்றங்களுக்கு மத்தியில், வெளிநாடுகளில் செயல்படும் தேடப்படும் குற்றவாளிகளை, குறிப்பாக ஐக்கிய அரபு இராச்சியத்தில் இருந்து நாடு கடத்துவதற்கான முயற்சிகளை அதிகாரிகள் தீவிரப்படுத்தியுள்ளனர்.

இந்த குற்றவாளிகளுக்கு சர்வதேச பொலிஸாரின் சிவப்பு அறிவிப்புகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன, இதில் இலங்கையில் சமீபத்தில் நடந்த துப்பாக்கிச் சூடுகளில் தேடப்படும் குற்றவாளிகளும் அடங்குவர்.

இலங்கை பொலிஸார் குறைந்தது 199 சிவப்பு அறிவிப்புகளைப் பெற்றுள்ளதாக தெரியவந்துள்ளது, அவற்றில் 60க்கும் மேற்பட்டவை தேடப்படும் குற்றவாளிகளை குறிவைத்து, அவர்களில் பலர் ஐக்கிய அரபு இராச்சியத்தில் மறைந்திருப்பதாகக் கூறப்படுகிறது.

பயங்கரவாதம், மோசடி மற்றும் பணமோசடிக்காக தேடப்படும் மற்றவர்களும் சிவப்பு அறிவிப்புகளில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

அவற்றில், மோசடி, கொலை மற்றும் போதைப்பொருள் குற்றங்களில் ஈடுபட்ட பெண்களுக்கு குறைந்தது ஒரு 10க்கும் மேற்பட்ட சிவப்பு அறிவிப்புகள் பிறப்பிக்கப்பட்டன.

கூடுதலாக, அதிகாரிகள் கிட்டத்தட்ட 100 நீல அறிவிப்புகளைப் பெற்றுள்ளனர். ஒரு நபரின் அடையாளம், இருப்பிடம் அல்லது குற்றவியல் விசாரணை தொடர்பான நடவடிக்கைகள் பற்றிய தகவல்களைச் சேகரிக்க நீல அறிவிப்புகள் பயன்படுத்தப்படுகின்றன.

இலங்கை அமெரிக்கா, துருக்கி, உக்ரைன், ரஷ்யா, வியட்நாம், சீனா மற்றும் ஐக்கிய அரபு இராச்சியத்துடன் நாடுகடத்தல் ஒப்பந்தங்களில் கையெழுத்திடப்பட்டுள்ளன.

இலங்கை மற்றும் ஐக்கிய அரபு இராச்சியம் நாடுகளுக்கு இடையே குற்றவியல் குற்றங்களுக்காக தேடப்படும் நபர்களை பரஸ்பரம் நாடு கடத்தும் ஒப்பந்தத்தில் 2022 நவம்பரில் கையெழுத்திட்டதாக வட்டாரங்கள் தெரிவித்தன.

பொலிஸாரின் கூற்றுப்படி, சிவப்பு அறிவிப்புகள் வெளியிடப்பட்ட 19 தேடப்படும் சந்தேக நபர்கள் சமீபத்தில் இலங்கைக்கு நாடு கடத்தப்பட்டுள்ளனர், அவர்களில் பலர் ஐக்கிய அரபு இராச்சியம் மற்றும் இந்தியாவிலிருந்து அழைத்து வரப்பட்டனர்.

கடந்த வாரம், இலங்கையிலிருந்து தப்பிச் சென்று துபாயில் மறைந்திருந்த மூன்று ஒழுங்கமைக்கப்பட்ட குற்றச் சந்தேக நபர்கள் குற்றப் புலனாய்வுத் துறை அதிகாரிகளால் நாட்டிற்கு நாடு கடத்தப்பட்டனர்.

இந்த நபர்கள் குற்றச் செயல்களுக்காக தேடப்படும் சந்தேக நபர்களாக அடையாளம் காணப்பட்டனர்.

இலங்கை மற்றும் ஐக்கிய அரபு இராச்சிய அதிகாரிகள் தேடப்படும் சந்தேக நபர்களை அடையாளம் கண்டு இலங்கைக்கு அழைத்து வருவதற்கான நடவடிக்கைகளை எடுக்க நெருக்கமாக செயல்பட்டு வருவதால், டுபாய் இனி குற்றவாளிகள் ஒளிந்து கொள்ள பாதுகாப்பான இடமாக இல்லை என்றும் வட்டாரங்கள் தெரிவித்தன. (அ)

## வடக்கு மக்களின் வாழ்க்கை மேம்பாட்டுக்கு சிறந்த திட்டங்களை முன்னெடுக்கவேண்டும்

### காவிந்த ஜயவர்தன கோரிக்கை

கொழும்பு, பெப். 27

தேசிய நல்லிணக்கத்தையும், ஒருமைப்பாட்டையும் கட்டியெழுப்பும் தரப்பினர் என்ற அடிப்படையில் யாழ் நூலக அபிவிருத்திக்கு 100 மில்லியன் ரூபாவை ஜனாதிபதி ஒதுக்கியுள்ளதை வரவேற்கிறோம்.

வடக்கு மக்களின் வாழ்க்கைத் தர மேம்பாடு மற்றும் சிந்தனை மாற்றம் ஆகியவற்றுக்கான சிறந்த திட்டங்களை முன்னெடுக்க வேண்டும். அவ்வாறான திட்டங்களுக்கு நிபந்தனையற்ற வகையில் ஆதரவளிப்போம் என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் வைத்தியர் காவிந்த ஜயவர்தன தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நடைபெற்ற 2025 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தின் விவாதத்தில் உரையாற்றுகையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-வரவு செலவுத் திட்டத்தின் அனைத்து முன்மொழிவுகளையும் விமர்சிக்கும் நிலைப்பாட்டில் எதிர்க்கட்சி இல்லை. யாழ் நூலகம் எரிப்பு தொடர்பில் ஜனாதிபதி தனது உரையில் குறிப்பிட்டிருந்தார்.

இதனை உணர்வுபூர்வமாக பார்க்க வேண்டும்.தேசிய நல்லிணக்கத்தையும், ஒருமைப்பாட்டையும் கட்டியெழுப்பும் தரப்பினர் என்ற அடிப்படையில் யாழ் நூலக அபிவிருத்திக்கு ஜனாதிபதி 100 மில்லியன் ரூபாவை ஒதுக்கியுள்ளதை வரவேற்கிறோம்.

யார் செய்தாலும் தவறு , தவறேயாகும். வடக்கு மக்களின் வாழ்க்கைத் தர மேம்பாடு மற்றும் சிந்தனை மாற்றம் ஆகியவற்றுக்காக சிறந்த திட்டங்களை முன்னெடுக்கவேண்டும். அவ்வாறான திட்டங்களை வரவேற்போம்.

கர்ப்பிணி தாய்மார்களுக்கும், பிள்ளைகளுக்குமான போசனைத் திட்டங்களுக்கு அதிக நிதி ஒதுக்கப்பட்டுள்ளமை சிறந்தது.

பொருளாதார நெருக்கடியால் பிள்ளைகள் போசாக்கின்மையால் பாதிக்கப்பட்டுள்ளார்கள். பிள்ளைகளே எமது எதிர்காலம். ஆகவே பிள்ளைகளுக்கு ஆரோக்கியத்தை யும், சிறந்த கல்வியையும் வழங்க வேண்டும்-என்றார். (அ)

## நிதியை முறையாக பயன்படுத்துவது அரச அதிகாரிகளின் பொறுப்பாகும்!

### ஜனாதிபதி வலியுறுத்து

கொழும்பு, பெப். 27

வரவு-செலவுத் திட்டத்தில் இருந்து ஒதுக்கப்படும் நிதியை உரிய பணிகளுக்கு திறம்படவும் நியாயமாகவும் பயன்படுத்துவது அரச அதிகாரிகளின் பொறுப்பாகும் என்று ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க வலியுறுத்தினார்.

வரையறுக்கப்பட்ட நிதி கட்டமைப்பிற்குள் கூட, இந்த ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் வளர்ச்சி முன்னுரிமைகள் மற்றும் மக்களின் தேவைகளை அடையாளம் கண்டு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக ஜனாதிபதி மேலும் தெரிவித்தார்.



ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்கவிற்கும் அமைச்சுக்களின் செயலாளர் களுக்கும் இடையில் ஜனாதி பதி செயலகத்தில் நடைபெற்ற கலந்துரையாடலின் போது இந்த விடயம் வலியுறுத்தப்பட்டது.

அதன்படி, செலவினங்களை நிர்வகிப்பதில் அரச அதிகாரிகள் உரிய பொறுப் புணர்வோடு செயல்பட வேண்டிய தன் அவசியத்தையும் ஜனாதிபதி வலியுறுத்தினார்.

பொது சேவை தொடர்பில் பொதுமக்களிடம் நல்ல அணுகுமுறை இல்லை என்றும் குறிப்பிட்ட ஜனாதிபதி, பொது சேவையில் உள்ள திறமையின்மையே இதற்குக் காரணம் என்றும் சுட்டிக்காட்டினார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 12,000 இற்கும் மேற்பட்டோர் வறட்சி காரணமாக பாதிப்பு

## களுத்துறை, இரத்தினபுரி மக்கள் அவதி

கொழும்பு, பெப். 27

**நிலவும் வறட்சியான காலநிலை காரணமாக, 2295 குடும்பங்களைச் சேர்ந்த 12,308 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.**

களுத்துறை மற்றும் இரத்தினபுரி மாவட்டங்களில் வறட்சி காரணமாக அதிகளவான மக்கள் பாதிக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

இருப்பினும்,எதுவிதமான உயிரிழப்புகள் பதிவாகவில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு குடிதண்ணீர் விநியோகிக்கப்பட்டு வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

வறட்சி காரணமாக மக்களின் அன்றாட வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளதாக அவர்கள் பெரும் சிரமத்தை எதிர்கொண்டுள்ளதாகவும் அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது. (அ)

# தனியார்துறை ஊழியரின் சம்பளம் அதிகரிக்கும் சாத்தியக்கூறு இல்லை

## ஐக்கிய தொழில்முனைவோர் மன்றம்

கொழும்பு, பெப். 27

வரவு-செலவுத் திட்டத்தின் மூலம் தனியார் துறை ஊழியர்களின் சம்பளத்தை அதிகரிக்க அரசாங்கம் முன்மொழிந்திருந்தாலும், அத்தகைய சம்பள அதிகரிப்புக்கான சாத்தியக்கூறுகள் இல்லை என்று ஐக்கிய தொழில்முனைவோர் மன்றம் தெரிவித்துள்ளது.

வணிகர்கள் திவாலான தங்கள் வணிகங்களை மீண்டும் உயிர்ப்பிக்க கால அவகாசம் தேவை என அதன் தலைவர் டானியா எஸ். அபேசுந்தர தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-நாங்கள் உங்களிடம் இருந்து எதிர்பார்ப்பது பட்ஜெட்டில் வைப்பதற்கான சில தரவுகள் அல்ல. சில செயல்படுத்தக்கூடிய திட்டங்கள். அரசு ஊழியர்களுக்கு சம்பள உயர்வு வழங்கப்பட்டுள்ளது. அது மிகவும் நல்ல விடயம். தனியார் துறையையும் அதையே செய்யச் சொல்லும்போது அதைப் பற்றி யோசித்துப் பாருங்கள். ரூ. 21,000 சம்பளத்தை ரூ. 27,000 ஆக உயர்த்தும்போது, அங்கேயே ரூ. 6,000 வித்தியாசம் உள்ளது. 50 - 60 மணிநேரத்திற்கு மேலதிக நேர வேலை செய்கிறார்கள். நாங்கள் ஒரு மணி நேரத்திற்கு ரூ. 210 செலுத்துகிறோம். அதற்கு மட்டும், நாங்கள் சுமார் ரூ. 10,000 செலுத்துகிறோம். அதனுடன் சேமலாப நிதி, நம்பிக்கை நிதி மற்றும் சம்பள அதிகரிப்பு அனைத்தையும் கூட்டும்போது, சுமார் ரூ. 15,000 அதிகரிக்கிறது. அது அடிப்படை சம்பளத்திலிருந்து அதிகரிக்கும்போது, தொழில் முனைவோராகிய எங்களுக்கு மிகவும் கடினமாக உள்ளது- என்றார். (அ)

# ஒரு பில்லியன் டொலரை கடந்த ஏற்றுமதி வருவாய்!

கொழும்பு, பெப். 27

இலங்கையின் ஏற்றுமதி வருவாய் ஒரு பில்லியன் டொலரைக் கடந்துள்ளதாக இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை தெரிவித்துள்ளது.

கடந்த ஜனவரி மாதத்தில் இலங்கையின் ஏற்றுமதி வருமானம் 1.3 பில்லியின் டொலரை தாண்டியுள்ளது.

கடந்த ஆண்டு ஜனவரி மாதத்துடன் ஒப்பிடும்போது, பொருட்கள் ஏற்றுமதி வருவாயில் 3.51 சதவீத அதிகரிப்பும், விவசாய ஏற்றுமதி வருவாயில் 14.87 சதவீத அதிகரிப்பும் ஏற்பட்டுள்ளதாக இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை அறிவித்துள்ளது.

மேலும், தொழில்துறை ஏற்றுமதி வருவாயில் 0.08 சதவீதமும், சேவை ஏற்றுமதி வருவாயில் 37.87 சதவீதமும் வளர்ச்சி ஏற்பட்டுள்ளது.

அதன்படி, கடந்த ஆண்டு ஜனவரி மாதத்துடன் ஒப்பிடும் போது,

பொருட்கள் ஏற்றுமதி வருவாயில் 3.51 சதவீத அதிகரிப்பும், விவசாய ஏற்றுமதி வருவாயில் 14.87 சதவீத அதிகரிப்பும் ஏற்பட்டுள்ளதாக இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சபை அறிவித்துள்ளது.

மேலும், தொழில்துறை ஏற்றுமதி வருவாயில் 0.08 சதவீதமும், சேவை ஏற்றுமதி வருவாயில் 37.87 சதவீதமும் வளர்ச்சி ஏற்பட்டுள்ளது.

அதன்படி, இந்த ஆண்டு ஜனவரியில் பொருட்கள் மற்றும் சேவைகள் உட்பட மொத்த ஏற்றுமதி வருவாய் 1,334.19 மில்லியன் அமெரிக்க டொலராக பதிவாகியுள்ளதாக இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை தெரிவித்துள்ளது. (அ)

# லொறி மோதி பெண் பலி!

கொழும்பு, பெப். 27

கந்தானை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பேரலந்த பிரதேசத்தில் இடம்பெற்ற விபத்தில் பெண் ஒருவர் உயிரிழந்துள்ளதாக கந்தானை பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்து நேற்றுக் காலை இடம்பெற்றுள்ளது. ராகமவிலிருந்து கந்தானை நோக்கிப் பயணித்த லொறி ஒன்று வீதியில் பயணித்த இரண்டு பெண்கள் மீது மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தில் படுகாயமடைந்த இரண்டு பெண்களும் ராகம வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் அவர்களில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

ரக்வானை பிரதேசத்தைச் சேர்ந்த 62 வயதுடைய பெண்ணொருவரே உயிரிழந்துள்ளார்.

இதனையடுத்து 35 வயதுடைய லொறியின் சாரதி சந்தேகத்தின் பேரில் பொலிஸா ரால் கைது செய்யப்பட்டுள்ளார். (அ)

# இஷாரா செவ்வந்தியின் உருவத்துக்கு ஒத்த உருவமுள்ள யுவதி ஒருவர் கைது!

கொழும்பு, பெப். 27

கணேமுல்ல சஞ்ஜீவவின் கொலை சம்பவத்தின் பிரதான சந்தேக நபராகக் கருதப்படும் இஷாரா செவ்வந்தி என்பவரின் உருவத்திற்கு இணையான யுவதி ஒருவர் மத்துகம பகுதியில் வைத்து கைது செய்யப்பட்டார்.

கைதானவர் எதிர்வரும் 14ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். 23 வயதான குறித்த யுவதி மத்துகம பகுதியில் உள்ள தமது வீட்டுக்கு அருகிலுள்ள வனப்பகுதியில் மறைந்திருந்த நிலையில் கைதானார். குறித்த யுவதியின் கைய டக்க தொலைப்பேசியைப் பரிசோதனை செய்வதற்காக நீதிமன்றத்திடம் உத்தரவைப் பெற்று அடுத்த கட்ட விசார ணைகளை முன்னெடுக்கவுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (அ)

# சிறைகளில் நவீன பாதுகாப்பு அமைப்புகள் நிறுவ நடவடிக்கை

கொழும்பு, பெப். 27

நாட்டிலுள்ள அனைத்து சிறைச்சாலைகளிலும் விசேட பாதுகாப்புத் திட்டத்தை செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதன் படி, தொலைபேசி இணைப்பு தடுப்பு சாதனங்களின் (ஜேமர்) நவீனமயமாக்கலும் சேர்க்கப்பட்டுள்ளது.

அண்மையில் நீதிமன்றத்தில் சுட்டுக் கொல்லப்பட்ட கணேமுல்ல சஞ்சீவவின் சம்பவத்தைத் தொடர்ந்து, நவீன தொழில்நுட்ப வசதிகளைப் பயன்படுத்தி சிறைச்சாலைகளில் பாதுகாப்பை பலப்படுத்த முடிவு செய்யப்பட்டுள்ளமை விசேட அம்சமாகும்.

சிறைச்சாலைகளில் ஏற்கனவே ஜேமர்கள் பொருத்தப்பட்டிருந்தாலும், சுட்டடங்களின் தன்மை காரணமாக தொலைபேசி இணைப்புகளை முற்றிலுமாகத் துண்டிக்க முடியவில்லை என்று சிறைச்சாலை தகவல்கள் தெரிவிக்கின்றன.

அதன்படி, ஜேமர்கள் உள்ளிட்ட பாதுகாப்பு நடவடிக்கைகளை நெறிப்படுத்துமாறு சிறைச்சாலைகள் திணைக்களத்துக்கு பாதுகாப்பு அமைச்சு ஆலோசனை வழங்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

தற்போது பொருத்தப்பட்டுள்ள ஜேமர்களின் குறைபாடுகள் காரணமாக, கைதிகள் தொலைபேசி இணைப்புகள் மூலம் வெளியாட்களுடன் ஏற்படுத்திக்கொண்ட தொடர்புகள் அதிகரித்துள்ளதாக சிறைச்சாலை தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதனால் சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்கள் தங்கள் விருப்பப்படி போதைப்பொருள் வலைப்பின்னல்களையும் குற்றங்களையும் தொடர்வதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

குறிப்பாக உயர்மட்ட சந்தேக நபர்கள் அடைத்து வைக்கப்பட்டுள்ள பூஸா போன்ற சிறைகளில், அவ்வப்போது கையடக்கத் தொலைபேசிகள் கண்டுபிடிக்கப்படுவதாக செய்திகள் வந்துள்ளன. (அ)

# மகிந்தவை ஆதரித்திருக்காவிட்டால் இன்று தமிழீழம் மலர்ந்திருக்கும்!

## கூறுகின்றார் விமல் வீரவன்ஸ

கொழும்பு, பெப். 27

"போரை முடிப்பதற்காக அன்று ஜே.வி.பியிலிருந்து வெளியேறி மகிந்த ராஜபக்சவை ஆதரித்திருக்காவிட்டால் இன்று தமிழ் ஈழம் மலர்ந்திருக்கும்" என்று முன்னாள் அமைச்சர் விமல் வீரவன்ஸ தெரிவித்தார்.

கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலின் போதே விமல் வீரவன்ஸ இவ்வாறு கூறினார்.

ஜே.வி.பியிலிருந்து வெளியேறி இருக்காவிட்டால் இன்று நீங்களும் உயர் பதவியில் இருந்திருக்கக்கூடும் அல்லவா என எழுப்பட்ட கேள்விக்கு பதிலளித்த விமல் வீரவன்ஸ கூறியவை வருமாறு-நான் அன்று அவ்வாறு வெளியேறி இருக்காவிட்டால் நாடு இரண்டாக பிளவுபட்டிருக்கும். நாம் வாழும் பகுதி தெற்காசியாவில் பலஸ்தீனமாக மாறி இருக்கும். மறுபுறத்தில் தெற்காசியாவில் இஸ்ரேலாக தமிழ் ஈழம் மாறியிருக்கும்.

ராஜபக்ஷக்களை பலப்படுத்துவதற்காக அல்ல, புலிகளைத் தோற்கடித்து போரை முடிவுக்கு கொண்டுவந்து, ஒற்றையாட்சியை பாதுகாப்பதற்காகவே அன்று அந்த முடிவை எடுத்தேன்.

அன்று நாம் அந்த முடிவை எடுத்திருக்காவிட்டால், இலங்கை என்ற நாடு இன்று மிஞ்சியுள்ளது. அவ்வாறு அல்லாவிட்டால் காசா பகுதி போல்தான் ஒரு நாடு இருந்திருக்கும்.

ஜே.வி.பியில் இருந்தபோதும், வெளியேறியுள்ள போதிலும் நாட்டுக்காக எமது பொறுப்பை நிறைவேற்றுவோம்-என்றார். (அ)

# அரசுமீது மக்களின் எதிர்ப்பு வலுக்கிறது!

## ராஜித சேனாரத்ன கூறுகிறார்



கொழும்பு, பெப். 27

அரசாங்கத்திற்கு எதிரான பொதுமக்களின் எதிர்ப்பு தொடர்ந்து அதிகரித்து வருவதாக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

ஊடகங்களிடம் பேசிய அவர், புதிய அரசாங்கத்திற்கு வாக்களித்த மக்கள் நடந்த சம்பவங்களால் வருத்தமடைந்துள்ளனர் எனவும் சுட்டிக்காட்டி யுள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவும் தற்போதைய ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவும் தோல்வியடைந்துவிட்டனர்.

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவால் நாட்டை மீண்டும் கட்டியெழுப்ப முடியும் என்பதை மக்கள் அங்கீகரிப்பதாகவும் ராஜித சேனாரத்ன மேலும் தெரிவித்தார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்.நூலகத்துக்கு நிதி ஒதுக்குவதைவிட அதிகாரப் பகிர்வே தமிழருக்கு முக்கியம்!

## வலியுறுத்துகிறது ஐக்கிய மக்கள் சக்தி

கொழும்பு, பெப். 27

**அரசமைப்பின் 13 ஆவது திருத்தச்சட்டத்துக்கு அப்பால் செல்லக்கூடிய அதிகாரப் பகிர்வையே வடக்கு-கிழக்கு மக்கள் கோருகின்றனர் எனவும், எனவே, அதனை வழங்குவதற்குரிய வேலைத்திட்டத்தை முன்னெடுக்குமாறும் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி வலியுறுத்தியுள்ளது.**

பாராளுமன்றத்தில் நடைபெற்ற பாதீடு மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார இவ்வாறு வலியுறுத்தினார்.



அவர் மேலும் தெரிவிக்கையில்-வடக்கு தொடர்பிலும், தமிழ் மக்கள் தொடர்பிலும் ஆளுங்கட்சி சாதகமாக கதைத்து வருகின்றது. இது நல்ல விடயம்.

அதேபோல யாழ். பல்கலைக்கழகத்தை அபிவிருத்தி செய்வதற்கு பாதீட்டில் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இதுவும் வரவேற்ககூடிய விடயம். ஆனால் இதைவிடவும் வேறொறு விடயத்தையே வடக்க, கிழக்கு தமிழ் மக்கள் எதிர்பார்க்கின்றனர்.

அரசமைப்பு மறுசீரமைப்பு, 13 இற்கு அப்பால் சென்ற அதிகாரப்பகிர்வு என்பன தொடர்பில் அம்மக்களுக்கு உறுதியளிக்கப்பட்டது.

இந்த பாதீட் டில் இதற்குரிய தீர்மானம் எடுக்கப்பட்டதா? இதற்குரிய அடித்தளம் இடப்பட்டுள்ளதா? கலந்துரையாடல் இடம்பெற்றதா?வடக்கு, கிழக்கு மக்கள் நூலகத்தை கேட்கவில்லை, அதிகாரப்பகிர்வையும், தமது உரிமைகளை பாதுகாக்கக்கூடியவாறான வேலைத்திட்டமொன்றையுமே எதிர்பார்க்கின்றனர். அதற்கு தேவையான நடவடிக்கையை எடுங்கள்-என்றார். (அ)

# தேசிய மகளிர் வாரம் பிரகடனம்!

கொழும்பு, பெப். 27

இம்முறை சர்வதேச மகளிர் தினமானது 'அனைத்து மகளிர் மற்றும் பெண் பிள்ளைகளுக்கான உரிமைகள், சமத்துவத்தை ஊக்கப்படுத்தல்' எனும் தொனிப்பொருளில் கொண்டாடப்படவுள்ளது.

அந்தவகையில் நிலையான எதிர்காலத்தை அமைக்க - வலிமைமிக்க அவளே முன்னோக்கிய வழி' என்பதை பிரதான கருப்பொருளாக கொண்டு மார்ச் 2ஆம் திகதியிலிருந்து மார்ச் 8ஆம் திகதி வரை தேசிய மகளிர் வாரத்தை பிரகடனப்படுத்தி சர்வதேச மகளிர் தின தேசிய கொண்டாட்டங்கள் உள்ளடங்களாக தேசிய, மாகாண,மாவட்ட மற்றும் பிரதேச மட்டத்தில் வேலைத்திட்டங்களை முன்னெடுப்பதற்கென துறைசார் அமைச்சர் முன்வைத்த யோசனைக்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

ஐக்கிய நாடுகள் அமைப்பினால் 1977ஆம் ஆண்டு மார்ச் மாதம் 8ஆம் திகதி சர்வதேச மகளிர் தினம் பிரகடனப்படுத்தப்பட்டது.

அன்று முதல் இன்று வரை ஐ.நா.வின் உறுப்பு நாடுகள் அனைத்திலும் மார்ச் 8ஆம் திகதி சர்வதேச மகளிர் தினம் கொண்டாடப் பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ)

# அநுரவின் முகமூடி அணிந்து நெல் விற்க வந்த விவசாயி!



கொழும்பு, பெப். 27

மகாவிலாச்சியவைச் சேர்ந்த ஒரு விவசாயி ரை கோட் மற்றும் ஜனாதிபதி அநுரகுமாரவின் பட முகமூடி அணிந்து, விலாச்சிய, பெமதுவவில் உள்ள அரசாங்க நெல் கிடங்குக்கு தனது அறுவடை செய்யப்பட்ட நெல் மூடையை விற்க சென்றுள்ளார்.

இந்த விவசாயி நெல்மூடையை ஒப்படைக்க வந்தபோதிலும், அப்போது பணியில் இருந்த அதிகாரி அதை ஆய்வு செய்து, அரசாங்க தரத்தின்படி ஈரமான எடை இல்லாததால் நெல் மூடையை ஏற்க மறுத்துவிட்டார்.

பின்னர், மகாவிலாச்சியவைச் சேர்ந்த விவசாயி அனுர பண்டார ஊடகங்களுடன் பேசும்போது-அரசாங்கத்தின் உத்தரவாத விலையான ஒரு கிலோ நெல்லுக்கு ரூ.120 போதுமானதாக இல்லை. தற்போதைய அரசாங்கம் ஆட்சிக்கு வருவதற்கு முன்பு முந்தைய அரசாங்கங்களை விமர்சித்து விவசாயிகளுடன் இணைந்து பணியாற்றி விவசாயிகளின் தலைவராக செயல்பட்ட தற்போதைய பிரதி அமைச்சர் நாமல் கருணாரத்ன, ஆட்சிக்கு வந்த பிறகு விவசாயிகளை மறந்துவிட்டார்.

இந்த வருட பெரும்போக நெல் அறுவடை தற்போது மகா விலாச்சிய பகுதியில் நிறைவடைந்து வருவதாகவும், இது போன்ற போதிலும், எந்தவொரு விவசாயியும் அரசாங்கத்தின் நெல் கிடங்குக்கு நெல் இருப்புக்களை வழங்கவில்லை என்றும் விவசாயி கூறினார்.

குறைந்த விலையில் நெல்லை வாங்குவதற்கு பதிலாக, ஐந்தாயிரம் ரூபாய்க்கு உர மூடைகளை வழங்கவும், எரிபொருள் விலையை குறைக்கவும் அரசாங்கத்திடம் அவர் கோரினார். (அ)

# வறுமை ஒழிப்புக்காக புதிய வேலைத்திட்டம்

கொழும்பு, பெப். 27

வறுமை ஒழிப்பு மற்றும் சமூக வலுவூட்டலுக்காக ஒருங்கிணைந்த வேலைத்திட்டமாக "பிரஜா சக்தி" வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

கிராம அபிவிருத்தி, சமூகப் பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சர் சமர்ப்பித்த இந்த யோசனைக்கு அமைச்சரவை ஒப்புதல் வழங்கியதாக அமைச்சரவை பேச்சாளர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

தற்போது இலங்கையின் ஒட்டுமொத்த மக்கள் தொகையில் 06 பேரில் ஒருவர் பல்பரிமாண வறுமைக்கு உள்ளாகியுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. குறிப்பாக, 95.3 வீத வறுமைக் கோட்டுக்குள் வாழும் மக்கள் கிராமப்புற மற்றும் பெருந்தோட்டத் தொழிலாளர்கள் ஆவர். இதுவரை நடைமுறைப்படுத்தப்பட்ட வறுமையொழிப்பு வேலைத்திட்டங்கள் எதிர்பார்த்த பலனை அளிக்கவில்லை என்பதையும் அவர் சுட்டிக்காட்டினார்.

கடந்த பல தசாப்தங்களாக வறுமையொழிப்பு வேலைத்திட்டங்களின் கீழ் நிவாரண உதவிகள் வழங்கப்பட்டுள்ள பயனாளிகளின் எண்ணிக்கை மற்றும் செலவழிக்கப்பட்ட நிதி தொடர்ந்து அதிகரித்து வருகிறது.

2000ம் ஆண்டில் 1.10 மில்லியன் பயனாளிகளாக இருந்தது, 2010ஆம் ஆண்டில் 1.57 மில்லியனாக அதிகரித்தது. தற்போதைய கணக்கீட்டின் படி, 2024ம் ஆண்டில் 1.79 மில்லியனாக உயர்ந்துள்ளது.

இந்த நிலை தொடர்ந்து நீடித்தால், நாட்டின் பொருளாதாரத்துக்கும் உற்பத்தி செயற்பாடுகளுக்கும் தடையாக மாறக்கூடிய சாத்தியக்கூறுகள் உள்ளன. எனவே, உண்மையான இடர்களுக்கு உள்ளாகக் கூடிய குடும்பங்களை மட்டும் முறைசார்ந்த சமூகப் பாதுகாப்பு வேலைத்திட்டங்களில் சேர்ப்பதோடு, மற்ற பயனாளிகளை பொருளாதார ரீதியாக முனைப்பான பங்காளர்களாக உருவாக்குவதற்கான திட்டமிடல் அவசியம் என அமைச்சரவைத் தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ)

# நீர் விநியோகம் பாதிப்பு

கொழும்பு, பெப். 27

தற்போது நிலவும் வறண்ட வானிலை காரணமாக, இலங்கையின் சில பகுதிகளில் நீர் விநியோகம் பாதிக்கப்பட்டுள்ளது.

இரத்மலானை, பிலியந்தலை, மொறட்டுவை, பாணந்துறை உள்ளிட்ட பல பகுதிகளில் நீர் விநியோகம் தடைப்பட்டுள்ளதாக தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் தலைவர் தெரிவித்தார்.

தற்போதைய சூழ்நிலையில் நீர் சிக்கனமாகப் பயன்படுத்துவதற்கான அவசியத்தை அவர் வலியுறுத்தினார்.

மக்கள் நீர் சேமிப்பதில் கவனம் செலுத்த வேண்டும் என்றும், இந்நிலை நீண்ட நாட்கள் நீடிக்கக்கூடியதாக இருந்தால், தண்ணீர் தட்டுப் பாட்டினால் பெரிதும் பாதிப்புகளை எதிர்கொள்ள நேரிட லாம் என்றும் அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார். (அ)

# ஜனவரி மாதத்தில் ஏற்றுமதி மூலம் 1.3 பில்லியன் டொலர் வருமானம்!

கொழும்பு, பெப். 27

இந்த வருடத்தின் ஜனவரி மாதத்தில் ஏற்றுமதி மூலம் நாட்டிற்கு 1.3 பில்லியன் டொலர் வருமானம் கிடைத்துள்ளதாக இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சபை தெரிவித்துள்ளது.

இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை விடுத்துள்ள அறிக்கையில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதன்படி கடந்த ஜனவரி மாதம் பொருள் ஏற்றுமதி வருமானமானது 3.51 சதவீத வளர்ச்சியாகவும், விவசாய ஏற்றுமதி வருமானமானது 14.87 சதவீத வளர்ச்சியாகவும் பதிவாகியுள்ளது.

இதற்கமைய, இந்த வருடத்தின் முதலாம் மாதத்தில் பொருட்கள் மற்றும் சேவைகள் உள்ளிட்ட மொத்த ஏற்றுமதி வருமானம் 1334.19 மில்லியன் அமெரிக்க டொலர்களாக பதிவானதாக இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சபை தெரிவித்துள்ளது. (அ)


# அநுர அரசின் பட்ஜெட் குறித்து ஆஸி. தூதருக்கு சஜித் விளக்கம்

கொழும்பு, பெப். 27

இலங்கையின் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவுடன் இலங்கைக்கான ஆஸ்திரேலியத் தூதுவர் போல் ஸ்டீபன்ஸ் பேச்சு நடத்தியுள்ளார்.

பாராளுமன்றத்திலுள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நடைபெற்ற இச்சந்திப்பில் இலங்கைக்கான ஆஸ்திரேலியாவின் பிரதித் தூதுவர் லலிதா கபூரும் பங்கேற்றிருந்தார்.

இலங்கையின் சமூக-பொருளாதார மற்றும் அரசியல் விடயங்கள் தொடர்பில் இதன்போது விரிவாக கலந்துரையாடப்பட்டுள்ளன.



தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தினால் முன்வைக்கப்பட்டுள்ள வரவு-செலவுத் திட்டம் குறித்தும், நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தல் குறித்தும் எதிர்க்கட்சித் தலைவர் ஆஸ்திரேலிய தூதுவருக்கு இச்சந்திப்பின்போது தெளிவுபடுத்தினார்.

வங்குரோத்து நிலையில் இருந்து இலங்கையை மீட்டெடுக்கத் தேவையான ஒத்துழைப்பை தொடர்ந்து வழங்குமாறும் எதிர்க்கட்சித் தலைவர் ஆஸ்திரேலியத் தூதுவரிடம் கோரிக்கை விடுத்தார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலை மாணவர்களுக்கு போதைப்பொருள் விற்பனை

## கைதான இருவரிடம் தொடர்ந்து விசாரணை

கல்முனை, பெப்.27

**ஐஸ், ஹெரோயின் உள்ளிட்ட போதைப்பொருட்களை நீண்ட காலமாக பாடசாலை மாணவர்களுக்கு விற்பனை செய்து வந்த இரு சந்தேக நபர்களிடமிருந்து ஐஸ் போதைப்பொருள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.**

அம்பாறை மாவட்டம் பெரியநீலாவணை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட புறநகர் பகுதியில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை அதிகாலை இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

கல்முனை விசேட அதிரடிப்படை அதிகாரிகளுக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கைகளின் போது 33, 34 வயதுடைய மருதமுனை பகுதியைச் சேர்ந்த இரு சந்தேக நபர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர். இந்த சந்தேக நபர்கள் வசமிருந்து 1,690 மில்லி கிராம் ஐஸ் போதைப் பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டது.

அத்துடன் கைதான இரு சந்தேக நபர்களுடன் சான்றுப் பொருட்கள் மேலதிக சட்ட நடவடிக்கைக்காக பெரிய நீலாவணை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. இது தொடர்பில் மேலதிக விசாரணைகளை கல்முனை விசேட அதிரடி படையினர் மேற்கொண்டு வருகின்றனர்.(எ-01)

# கிளீன் சிறீலங்கா திட்டம் சம்மாந்துறையில் ஆரம்பம்

கல்முனை, பெப்.27

கிளீன் சிறீலங்கா வேலைத் திட்டத்தை வினைத்திறன் மிக்கதாக செயல்படுத்தும் பொருட்டு நேற்று அம்பாறை மாவட்டம், சம்மாந்துறை கல்லரிச்சல் பொட்டியர் சந்தியில் உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ். எல். முகம்மது ஹனீபா தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக கிராமிய அபிவிருத்தி சமூக வலுவூட்டல் பிரதி அமைச்சர் வசந்த பியதிஸ்ஸ கலந்து கொண்டதுடன் கௌரவ விருந்தினராக அம்பாறை கரையோர பிரதேசங்களின் ஒருங்கிணைப்புக் குழுத் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான ஏ. ஆதம் பாவா, அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் சிந்தக அபேவிக்கிரம, அம்பாறை மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் எஸ். எல். ஏ. கமல் நெத்திமி ஆகியோர் கலந்து கொண்டனர்.

கிளீன் சிறீலங்கா வேலைத் திட்டத்தின் கீழ் சம்மாந்துறை பிரதேசத்தில் தெரிவு செய்யப்பட்ட மூன்று இடங்களில் சிரமதானம் நடைபெற்றது.(எ-01)

# திருமலையில் யுனானி தினம்



திருகோணமலை, பெப்.27

2025 ஆம் ஆண்டுக்கான யூனானி தினம் நேற்றுக் காலை திருகோணமலையில் நடைபெற்றது.

யூனானி மருத்துவத்தின் பாரம்பரிய சிறப்பையும், அதன் அறிவியல் அடிப்படையிலான பயன்பாடுகளையும் முன்னிறுத்தும் வகையில் யூனானி தினம் நடைபெற்றது.

மருத்துவர் அப்துல் வஹாப் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக கிழக்கு மாகாண ஆளுநர் ஜெயந்தலால் ரத்னசேகர கலந்து கொண்டார். (எ)

# சமூர்த்தி 'ரன் விமன' திட்டத்தின் பயனாளிகளுக்கு வீடு கையளிப்பு

கல்முனை, பெப்.27

கல்முனை வடக்கு பிரதேச செயலகப் பிரிவில் சமூர்த்தி ரன் விமன வீடமைப்புத் திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட வீடுகள் நேற்று முன்தினம் பயனாளிகளுக்கு கையளிக்கப்பட்டன.

பிரதேச செயலாளர் ரி. ஜே. அதிசயராஜ் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் சமூர்த்தி தலைமைப்பீட முகாமையாளர் வீ. சிறிநாதன், முகாமைத்துவப் பணிப்பாளர் ஏ. எல். எம். நஜீப் உள்ளிட்ட பிர



தேச செயலக உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர்.

பெரியநீலாவணை 2 மற்றும் பாண்டிருப்பு 1 ஏ ஆகிய கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் உள்ள இரண்டு பயனாளிகளுக்கு இந்த வீடுகள் கையளிக்கப்பட்டன. (எ)

# முன்பள்ளி ஆசிரியர்களுக்கான சுகாதார மேம்பாட்டு கருத்தரங்கு

காரைதீவு, பெப்.27

அம்பாறை, காரைதீவு பிரதேசத்தில் உள்ள சகல முன்பள்ளிகளின் சுகாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில் சகல முன்பள்ளி ஆசிரியர்களுக்கான சுகாதார மேம்பாட்டு கருத்தரங்கு நேற்று காரைதீவு சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தில் நடைபெற்றது.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் திருமதி சகீலா இஸ்ஸடீனின் வழிகாட்டலுக்கு அமைய காரைதீவு சுகாதார வைத்திய அதிகாரி தஸ்லிமா வசீர் தலைமையில் இந்தக் கருத்தரங்கு நடைபெற்றது.

இதில், வளவாளராக மருத்துவர் முஹம்மட் ஹில்மி



கலந்து கொண்டு சுகாதார மேம்பாட்டு விரிவுரைகளை வழங்கினார். அத்துடன் சகல முன்பள்ளிகளின் சுகாதாரத்தை மேம்படுத்தும் வகையில் தொடர்ச்சியாக கண்காணிப்பை மேற்கொள்வதற்கான சகல திட்டங்களும் வகுக்கப்பட்டன. அந்த வகையில் ஒவ்வொரு கிழமையும் ஒரு முன்பள்ளி பிள்ளைகளின் பெற்றோர்களுக்கான கருத்தரங்கு ஒன்றை நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்த கருத்தரங்கில் கல்முனை கல்வி வலய ஆரம்பப் பிரிவின் உதவிக் கல்விப் பணிப்பாளர் , காரைதீவு பிரதேச முன்பள்ளி சிறுவர் அபிவிருத்தி உத்தியோகத்தர் உட்பட முன்பள்ளி ஆசிரியைகள் கலந்து கொண்டனர். (எ-06)

# 5 உணவக நிலையங்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல்

கல்முனை, பெப்.27

சம்மாந்துறையில் 5 உணவக நிலையங்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

நோன்பு காலத்தை முன்னிட்டு கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் சகீலா இஸ்ஸடீனின் நெறிப்படுத்தலில் நேற்று முன்தினம் உணவுப் பரிசோதனை நடவடிக்கை அம்பாறை மாவட்டம் சம்மாந்துறை சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்துக்கு உட்பட்ட உணவகங்கள் மற்றும் வர்த்தக நிலையங்கள் மீது மேற்கொள்ளப்பட்டன.

இந்த நடவடிக்கையின் போது சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி ஜே. மதன் தலைமையிலான பொதுச் சுகாதார பரிசோதகர்கள் பங்கேற்றனர்.

அப்போது, மனித நுகர்வுக்குப் பொருத்தமற்ற உணவுப் பண்டங்கள் மற்றும் பொருட்களை சுகாதாரத்துக்கு முறைகேடான வகையில் தயாரித்து வியாபார நடவடிக்கையில் ஈடுபட்ட வர்த்தக நிலையங்கள் உள்ளிட்டவைகள் சோதனை மேற்கொள்ளப்பட்டு பாவனைக்கு உதவாத பொருட்கள் அங்கிருந்து கைப்பற்றப்பட்டன.

பின்னர் குறித்த சோதனையில் இனங்காணப்பட்ட 5 உணவக நிலையங்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.(எ-01)

# உத்தியோகத்தர்களின் கலை நிகழ்வு

கல்முனை, பெப்.27

தேசிய மொழிக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனத்தால் அம்பாறை, மட்டக்களப்பு, யாழ்ப்பாணம், திருகோணமலை மாவட்ட அரச உத்தியோகத்தர்களுக்காக நடத்தப்பட்ட 100 மணித்தியாலம் மற்றும் 150 மணித்தியாலங்கள் கொண்ட இரண்டாம் மொழி பயிற்சி நெறியை பூர்த்தி செய்த அரச உத்தியோகத்தர்களின் கலை நிகழ்வு கடந்த 23 ஆம் திகதி



ஞாயிற்றுக்கிழமை மருதமுனை ஷம்ஸ் மத்திய கல்லூரி அரங்கில் சிறப்பாக நடைபெற்றது. (எ- 01)

# ஈஸ்டன் ஸ்டார் அணி சம்பியன்



திருகோணமலை, பெப்.27

திருகோணமலை லெஜன்ட்ரி கிரிக்கெட் அகடமி மற்றும் மட்டக்களப்பு நிவ் ஈஸ்டன் ஸ்டார் கிரிக்கெட் அகடமிக்கிடையிலான இரண்டாவது பிரதான தொடர் போட்டி திருகோணமலை நகர சபை விளையாட்டு மைதானத்தில் கடந்த 22, 23 ஆம் திகதிகளில் நடைபெற்றது.இறுதிப் போட்டியில் மட்டக்களப்பு நிவ் ஈஸ்டன் ஸ்டார் கிரிக்கெட் அணி வெற்றி பெற்று சம்பியனானது.(எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேகமாக பரவும் மர்மக் காய்ச்சல் கொங்கோவில் 53 பேர் உயிரிழப்பு

கின்ஷாசா, பெப்.27

**ஆபிரிக்க நாடான கொங்கோவில் வேகமாகப் பரவி வரும் மர்மக் காய்ச்சலால் இதுவரை 53 பேர் உயிரிழந்தனர்.**

கடந்த மாதம் 21ஆம் திகதி வடமேற்கு பிராந்தியமான போலோகோ நகரில் இந்த நோய் பாதிப்பு முதன் முதலாக கண்டறியப்பட்டதாக உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது.

ஆனால், தொடங்கிய ஒரு மாதத்துக்குள் சுமார் 420 பேருக்கு இந்தக் காய்ச்சல் பரவியுள்ளது. அவர்களில் 53 பேர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தனர். எனவே, இதுகுறித்து தீவிர ஆய்வு மேற்கொண்டு வருவதாக அந்நாட்டின் சுகாதாரத் துறை தெரிவித்துள்ளது. (எ)

# 300 கோடி ஆண்டு பழமையான கடற்கரை கண்டுபிடிக்கப்பட்டது

## செவ்வாய் கிரகத்தில் தொடரும் ஆய்வு

பீஜிங், பெப்.27

செவ்வாய் கிரகத்தில் 300 கோடி ஆண்டுகள் பழமையான கடற்கரை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

பூமிக்கு அடுத்தபடியாக இருக்கும் செவ்வாய் கிரகத்தில் கடந்த 2018ஆம் ஆண்டு கியூரியா சிற்றி விண்கலத்தை இறக்கி அமெரிக்காவின் விண்வெளி நிறுவனமான நாசா ஆய்வு மேற்கொண்டது. அந்த ஆய்வில், செவ்வாய் கிரகத்தில் 30 கோடி ஆண்டுகளுக்கு முற்பட்ட பண்டைய கரிமப் பொருள் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது.

தற்போது, சீன விண்வெளி ஆய்வு நிறுவனம் அனுப்பிய ஜூராங் ரோவர் கருவி, அங்கு 300 கோடி ஆண்டுகள் பழமையான கடற்கரை படிமங்கள் இருப்பதை கண்டறிந்துள்ளது.

செவ்வாய் கிரகத்தில் மனிதன் வாழ்வதற்கு தேவையான நீர், ஒக்சிஜன், மண் உள்ளிட்ட புவியியல் அமைப்புகள் இருக்கிறதா? என்ற ஆராய்ச்சிகள் தொடர்ந்து கொண்டிருக்கும் நிலையில், 300 கோடி ஆண்டுகள் பழமையான கடற்கரை படிமம் கண்டுபிடிக்கப் பட்டிருப்பது, தண்ணீர் இருப்பதை மேலும் உறுதி செய்வதாக அமைந்துள்ளது.

ஆனால், இந்த கடல் நீர் பூமியில் உள்ளது போன்று உப்புத்தன்மை கொண்டதா?, அல்லது தண்ணீர் போன்று சுவையானதா? என்பது உறுதி செய்யப்படவில்லை. (எ)

### அமெரிக்காவில் தங்க அட்டை விலை 5 மில்லியன் டொலர்!

வாஷிங்டன், பெப்.27

அமெரிக்காவில் குடியேறுபவர்களுக்காக 'தங்க அட்டை' என்ற திட்டத்தை அறிமுகப்படுத்த உள்ளதாகவும், 5 மில்லியன் டொலர்களை கொடுத்து அதனைப் பெற்றுக் கொள்ளலாம் என்றும் அந்த நாட்டின் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் அறிவித் துள்ளார்.

இது குறித்து அவர் கூறுகையில், "நாங்கள் தங்க அட்டை ஒன்றை விற்பனை செய்ய இருக்கிறோம். கிரீன் அட்டை போல இது தங்க அட்டை. இந்த அட்டைக்கு நாங்கள் 5 மில்லியன் டொலர்கள் என விலை நிர்ணயம் செய்துள்ளோம். இதில் கிரீன் அட்டையில் இருக்கும் அனைத்து சலுகைகளும் கிடைக்கும்.

இது குடியுரிமைக்கான ஒரு வழியாகும். பணக்காரர்கள் எங்கள் நாட்டுக்கு இந்த தங்க அட்டையை பெற்று வரலாம். அவர்கள் இங்கே வசதியு டனும், வெற்றிகரமாகவும் இருப்பார்கள். அவர்கள் நிறைய பணம் செலவு செய்வார்கள், நிறைய வரி செலுத்துவார்கள். நிறைய பேரை வேலைக்கு அமர்த்துவார்கள்"- என்று ட்ரம்ப் தெரிவித்தார். (எ)

கும்பமேளாவில் ஒரே நேரத்தில்

# 15,000 பேர் தூய்மை பணி புதிய கின்னஸ் சாதனை



பிரயாக்ராஜ், பெப்.27

இந்தியாவின் உத்தர பிரதேச மாநிலம் பிரயாக்ராஜில் நடைபெற்று வரும் மகா கும்பமேளாவில் நேற்று முன்தினம் ஒரே நேரத்தில் 15,000இற்கும் மேற்பட்டோர் தூய்மைப் பணியில் ஈடுபட்டு புதிய கின்னஸ் சாதனை படைத்துள்ளனர். (எ)

# இந்தியாவை தோற்கடிக்காமல் நான் ஒருபோதும் ஓயமாட்டேன்

## பாக். பிரதமர் ஷெபாஸ் ஷெரீப் சூளுரை

இஸ்லாமாபாத், பெப்.27

இந்தியாவை தோற்கடிக்காமல் விடமாட்டேன் என்று பாகிஸ்தான் பிரதமர் ஷெபாஸ் ஷெரீப் சூளுரைத்துள்ளார்.

இந்தியாவை விட சிறந்த நாடாக பாகிஸ்தானை மாற்றுவேன் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

பஞ்சாப் மாகாணத்தில் உள்ள தேரா காசி கான் பகுதியில் நேற்று முன்தினம் நடைபெற்ற நிகழ்ச்சியில் ஷெபாஸ் ஷெரீப் மேலும் கூறுகையில், "பாகிஸ்தான் நிலைமையை மேம்படுத்த நாங்கள் இரவும் பகலும் உழைக்கிறோம். கடவுள் எப்போதும் பாகிஸ்தானை ஆசிர்வதிப்பார்.

பொருளாதாரம் மற்றும் வளர்ச்சியில் இந்தியாவைவிட சிறந்த நாடாக பாகிஸ்தானை உருவாக்கவில்லை என்றால் எனது பெயரை மாற்றிக் கொள்வேன். நான் நவாஸ் ஷெரீபின் இரசிகன், அவரது வழியைப் பின்பற்றுபவன்.

அவரால் ஆசிர்வதிக்கப்பட்ட எனது வாழ்க்கை மீது சத்தியம் செய்கிறேன், எனது உடம்பில் சக்தி இருக்கும்வரை போராடி, இந்தியாவைத் தோற்கடித்து பாகிஸ்தானை மகத்துவமான நாடாக உயர்த்துவேன். பிற நாடுகள் மற்றும் அமைப்புகள் வழங்கும் கடனை நம்பி இருப்பதைவிட, தன்னிறைவு பெற்ற பொருளாதாரம் கொண்ட நாடாக பாகிஸ்தானை உருவாக்குவோம்"- என்றார். (எ)

# மாவீரர்களை நெஞ்சில் ஏந்தி களம் புகுவோம்

சென்னை, பெப்.27

இன்னொரு மொழிப்போர் நம் மீது திணிக்கப்பட்டால், தமிழைக் காப்பதற்காகச் சிறைக் கொடுமைக்குள்ளாகி, தன் இன்னுயிர் ஈந்த நடராசன், தாளமுத்து எனும் மாவீரர்களை நெஞ்சில் ஏந்தி, களம் புகுவோம் என தமிழக முதல்வரும் தி.மு.க. தலைவருமான மு. க. ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

ஹிந்தி திணிப்பை என்றும் எதிர்ப்போம் என்ற தலைப்பில் நேற்று இரண்டாவது நாளாக தொண்டர்களுக்கு ஸ்டாலின் கடிதம் எழுதியுள்ளார். அந்த கடிதத்தில், "தமிழர்களின் தனித்துவமான குணம் என்பது சுயமரியாதை உணர்வு. அதனை சீண்டிப் பார்க்க எவர் நினைத்தாலும் அனுமதிக்க மாட்டோம்.

ஹிந்தி எழுத்துகளை அழித்துவிட்டால் வடமாநில பயணிகள் எப்படி ரயில் நிறுத்தங்களை அடையாளம் காண்பார்கள்? என்று இங்கேயுள்ள பா. ஜ. க. நிர்வாகிகள் சிலர் கேட்கிறார்கள். அவர்களுடைய இந்த உணர்வு நியாயமாகத் தமிழ் மீது இருந்திருக்க வேண்டும்"- என்று ஸ்டாலின் மேலும் குறிப்பிட்டுள்ளார். (எ)

அமெரிக்க இராணுவ உதவிக்கு ஈடாக

# உக்ரைனிலுள்ள அரியவகை தாதுக்களை எடுக்கத் திட்டம்

வாஷிங்டன், பெப்.27

"உக்ரைனில் உள்ள அரியவகை தாதுக்களை எடுத்துக் கொள்ள அமெரிக்காவுக்கு அனுமதியளிக்கும் ஒப்பந்தத்தில் உக்ரைன் விரைவில் கையெழுத்திடும்"- இவ்வாறு அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

வெள்ளைமாளிகையில் நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

ரஷ்யாவுக்கு எதிரான போரில் உக்ரைனுக்கு அமெரிக்கா வழங்கிய இராணுவ உதவிகளின் மொத்த மதிப்பு 180 பில்லியன் அமெரிக்க டொலர்களாகும். இதனைத் திருப்பித்தர அமெரிக்கா வலியுறுத்தி வருகிறது. அல்லது, இந்த உதவிக்கு ஈடாக உக்ரைனில் உள்ள மிகவும் அரி தான தாதுக்களை எடுத்துக் கொள்ளவும் அமெரிக்கா திட் டமிட்டு வருகிறது. இதற்கான ஒப்பந்தம் அமெரிக்கா - உக்ரைன் இடையே விரைவில் கையெழுத்தாகும் என எதிர் பார்க்கப்படுகிறது.

இதேவேளை, உக்ரைனில் இருந்து ரஷ்ய படைகளை உடனடியாக திரும்பப்பெற வலியுறுத்தி ஐ. நாவில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இந்தத் தீர்மானத்துக்கு எதிராக அமெரிக்கா வாக்களித்துள்ளது.

இந்த நிலையில், உக்ரைன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கி விரைவில் அமெரிக்காவுக்கு வருவார். உக்ரைனில் உள்ள அரியவகை தாதுக்களை எடுத்துக்கொள்ள அமெரிக்காவுக்கு அனுமதியளிக்கும் ஒப்பந்தத்தில் உக்ரைன் விரைவில் கையெழுத்திடும் என எதிபார்க்கிறேன் என்று ட்ரம்ப் கூறினார். (எ)

# ரஷ்யா - உக்ரைன் போர் ஒரு வாரத்துக்குள் முடிவு

## அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப்



வாஷிங்டன், பெப்.27

ரஷ்யா - உக்ரைன் இடையிலான போர் இறுதிக்கட்டத்தை நெருங்கிவிட்டது என்றும் ஒருவாரத்துக்குள் முடிவுக்கு வரும் என்றும் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

இந்த இரு நாடுகள் இடையேயான போர் ஆயிரத்து 97 ஆவது நாளாக நீடித்து வருகிறது. இந்தப் போரில் ஆயிரக்கணக்கானோர் உயிரிழந்தனர்.

இதனிடையே, இந்தப் போரை நிறுத்த ட்ரம்ப் முயற்சித்து வருகிறார். மேலும், போர் நிறுத்தத்துக்கு உக்ரைன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கி தடையாக இருப்பதாக ட்ரம்ப் கூறி வருகிறார்.

இந்த நிலையில், பிரான்ஸ் ஜனாதிபதி இம்மா னுவேல் மக்ரோன் நேற்று முன்தினம் அமெரிக்காவுக்கு சென்றுள்ளார். அவர் வெள்ளை மாளிகை யில் ஜனாதிபதி ட்ரம்ப்பை சந்தித்தார். இந்தச் சந்திப்பின் போது உக்ரைன் - ரஷ்யா போர் உட்பட பல்வேறு விவ காரங்கள் குறித்து இருநாட்டு தலைவர்களும் ஆலோசித்தனர்.

இதன்பின்னர் நடைபெற்ற செய்தியாளர்கள் சந்திப்பில் ட்ரம்ப் கூறுகையில், "ரஷ்யா - உக்ரைன் இடையேயான போர் இறுதிக்கட்டத்தை நெருங்கி விட்டது.

ஐரோப்பிய அமைதிப் படையினரை உக்ரைனில் நிலைநிறுத்த ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் சம்மதிப்பார் என நம்புகிறேன். போர் இன்னும் ஒருவாரத்துக்குள் முடிவுக்கு வரும் என எதிர்பார்க்கிறேன்"- என்றார். (எ)

# நடுவானில் விமானியை சிலந்தி கடித்ததால் பரபரப்பு

மட்ரிட், பெப்.27

நடுவானில் விமானியை சிலந்தி கடித்ததால் ஜேர்மனி - ஸ்பெயின் விமானத்தில் பரபரப்பு ஏற்பட்டது.

ஜேர்மனியின் டசல்டார்ப் நகரத்திலிருந்து ஸ்பெயினின் மட்ரிட் நகருக்கு நேற்று முன்தினம் மாலை ஐபீரியா ஏர்பஸ் ஏ - 320 விமானம் சென்று கொண்டிருந்தது. அந்த விமானம் நடுவானில் பறந்து கொண்டிருந்தபோது, விமானியை சிலந்தி பூச்சி ஒன்று கடித்ததாக கூறப்படுகிறது.

இதனால், விமானிக்கு கடுமையான அலர்ஜி ஏற்பட்டுள்ளது. இதையடுத்து விமானப் பணிப் பெண்கள், முதலுதவிப் பெட்டியில் இருந்த மருந்துகளைக் கொண்டு விமானிக்கு முதலுதவி சிகிச்சையளித்தனர்.

இதற்கிடையில், விமானம் திட்டமிட்டபடி மட்ரிட் விமான நிலையத்தில் தரையிறங்கியது. விமானத்தில் இருந்த அனைவரும் பத்திரமாக வெளியேற்றப்பட்ட பின்னர், விமானம் முழுவதும் பூச்சிக்கொல்லி மருந்து தெளிக்கப்பட்டு சுத்தம் செய்யப்பட்டது. அலர்ஜியால் பாதிக்கப்பட்ட விமானியின் உடல்நிலை சீராக இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரி - 20 தொடர் சிம்பாவே வசம்!




ஹராரே, பெப்.27

3ஆவது ரி - 20 போட்டி மழையால் இரத்துச் செய்யப்பட்ட நிலையில் 1 - 0 என்ற கணக்கில் சிம்பாவே அணி தொடரை கைப்பற்றியது.

அயர்லாந்து கிரிக்கெட் அணி சிம்பாவேயில் சுற்றுப் பயணம் மேற்கொண்டு ஒரு டெஸ்ட், 3 ஒருநாள் மற்றும் 3 ரி - 20 போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடியது. இதில், டெஸ்ட் தொடரை 1 - 0 என்ற கணக்கில் அயர்லாந்தும், ஒருநாள் தொடரை 2 -1 என்ற கணக்கில் சிம்பாவேவும் கைப்பற்றின.

இதையடுத்து இவ்விரு அணிகள் இடையிலான ரி - 20 தொடர் நடைபெற்றது .

முதல் போட்டி மழையால் இரத்தானது. 2ஆவது போட்டியில் சிம்பாவே 3 விக்கெட்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. இந்த நிலையில், இரு அணிகளுக்கும் இடையிலான 3ஆவது போட்டி நேற்று முன்தினம் நடைபெற்றது.

இதில், சிம்பாவே அணி முதலில் துடுப்பெடுத்தாடியது. மழை காரணமாக இந்த போட்டி 18 ஓவர்களாக குறைக்கப்பட்டது. இறுதியில் சிம்பாவே 6 விக்கெட்கள் இழப்புக்கு 142 ஓட்டங்கள் எடுத்தது. தொடர்ந்து 143 ஓட்டங்கள் இலக்குடன் அயர்லாந்து அணி விளையாட இருந்தது .

இந்த நிலையில் மீண்டும் மழை குறுக்கிட்டது . இதனால் ஆட்டம் மீண்டும் தொடங்குவதில் தாமதம் ஏற்பட்டது . மழை தொடர்ந்து பெய்ததால் போட்டி இரத்துச் செய்யப்படுவதாக அறிவிக்கப்பட்டது. இதனால் 1-0 என சிம்பாவே ரி - 20 தொடரை கைப்பற்றியது. (எ)

# தோல்வி மிகவும் ஏமாற்றமளிக்கிறது

## ஸ்மிருதி மந்தனா கவலை




பெங்களூரு, பெப்.27

மகளிர் பிரீமியர் லீக் தொடரில் பெங்களூருவில் கடந்த 24 ஆம் திகதி நடைபெற்ற லீக் ஆட்டத்தில் பெங்களூரு - உ.பி.வாரியர்ஸ் அணிகள் மோதின. இந்த ஆட்டத்தில் சூப்பர் ஓவரில் பெங்களூருவை வீழ்த்தி உ.பி.வாரியர்ஸ் வெற்றி பெற்றது.

தோல்வியடைந்த பின்னர் பெங்களூரு அணித் தலைவி ஸ்மிருதி மந்தனா அளித்த பேட்டியில்,"இந்தத் தோல்வி மிகவும் ஏமாற்றம் அளிக்கிறது. இப்போட்டியில் நாங்கள் துடுப்பாட்டம் மற்றும் பந்துவீச்சில் நிறைய விடயங்களைச் சரியாகச் செய்தோம். நாங்கள் இந்தத் தோல்வியை ஏற்றுக்கொண்டு வலுவாக மீண்டு வருவோம். இந்தப் போட்டியில் நான் சோபிக்கத் தவறினேன்.

அதனால் சில விடயங்களில் உழைத்து வலுவாக மீண்டு வருவேன்"- என்றார். (எ)

# "துடுப்பாட்டம், களத்தடுப்பில் நாங்கள் முன்னேற வேண்டும்"

ராவல்பிண்டி, பெப்.27

"துடுப்பாட்டம் மற்றும் களத்தடுப்பில்நாங்கள் முன்னேற வேண்டும்"- இவ்வாறு பங்களாதேஷ் அணி தலைவர் கூறினார்.

நியூசிலாந்துக்கு அணிக்கு எதிரான போட்டியில் அடைந்த தோல்விக்குப் பின்னர் ஷாண்டோ அளித்த பேட்டியில் இவ்வாறு குறிப்பிட்டார்.இப்போட்டியை நாங்கள் நன்றாகத் தொடங்கினோம். ஆனால், இடைப்பட்ட ஓவர்களில் ஓட்டங்களைச் சேர்க்க வேண்டிய தருணத்தில் அதிக விக்கெட்களை இழந்தோம். அங்கு நாங்கள் சரியாக துடுப்பாட்டம் செய்யவில்லை.

நஹித் ராணா மிகச்சிறப்பான பந்துவீச்சாளர். அவர் பந்து வீசிய விதத்தில் நான் மகிழ்ச்சியடைகிறேன். கடந்த இரண்டு ஆண்டுகளாக பந்துவீச்சு பிரிவு சிறப்பாக செயல்பட்டு வருகிறது"- என்றார். (எ)

# ஆஸி - தென்னாபிரிக்கா ஆட்டம் மழையால் இரத்து

ராவல்பிண்டி, பெப்.27

அவுஸ்திரேலியா - தென்னாபிரிக்கா இடையேயான ஆட்டம் மழை காரணமாக இரத்துச் செய்யப்பட்டது.

9ஆவது ஐ. சி. சி. சம்பியன்ஸ் கிண்ண கிரிக்கெட் போட்டி பாகிஸ்தான் மற்றும் டுபாயில் நடைபெற்று வருகிறது.

இதில், ராவல்பிண்டியில் நேற்று முன்தினம் நடைபெறவிருந்த ஆட்டத்தில் அவுஸ்திரேலியா - தென்னாபிரிக்கா அணிகள் மோதவிருந்தன. ஆனால், இந்த ஆட்டம் தொடங்கும் முன்னரே அங்கு மழை பெய்ததால் போட்டி இரத்துச் செய்யப்படுவதாக அறிவிக்கப்பட்டது. இதனால், அவுஸ்திரேலியா, தென்னாபிரிக்கா அணிகளுக்கு தலா ஒரு புள்ளி வழங்கப்பட்டுள்ளது. (எ)

# ஐ. சி. சி. தொடர்கள்மீது ரச்சின் அதிக விருப்பம்

ராவல்பிண்டி, பெப்.27

ரச்சின் ரவீந்திரா ஐ. சி. சி தொடர்களை மிகவும் விரும்புகிறார் என்று மிட்செல் சாண்ட்னர் தெரிவித்தார்.

ஐ.சி.சி. சம்பியன்ஸ் கிண்ண கிரிக்கெட் போட்டி பாகிஸ்தான் மற்றும் டுபாயில் நடைபெற்று வருகிறது. இந்தத் தொடரில் கடந்த 24 ஆம் திகதி நடைபெற்ற ஆட்டத்தில் நியூசிலாந்து - பங்களாதேஷ் அணிகள் மோதின.இதில், நியூசிலாந்து 5 விக்கெட்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

இதன் மூலம் அந்த அணி அரையிறுதிக்கு முன்னேறியது. நியூசிலாந்து தரப்பில் அதிகபட்சமாக ரச்சின் ரவீந்திரா சதம் (112 ரன்) அடித்து அசத்தினார். இந்த நிலையில், ரச்சின் ரவீந்திரா ஐ.சி.சி. தொடர்களை மிகவும் விரும்புவதாக அந்த அணியின் தலைவர் மிட்செல் சாண்ட்னர் கூறினார்.

இந்தப் போட்டிக்கு பின்னர் சாண்ட்னர் அளித்த பேட்டியில், "பங்களாதேஷ் அணி எங்களுக்கு சவாலாக இருக்கும் என்பது எங்களுக்குத் தெரியும். பிரேஸ்வெல் ஒரு தரமான பந்து வீச்சாளர்.

இப்போட்டியில் அவர் தனது வேகத்தை மாற்றி சிறப்பாக பந்துவீசி எதிரணியை அழுத்தத்தில் தள்ளினார். ரச்சின் ரவீந்திரா ஐ.சி.சி. தொடர்களை மிகவும் விரும்புகிறார்.

அவர் ஒருபோதும் ஆட்டத்தை விட்டு வெளியே நவில்லை. மேலும், அவர் ரொம் லேதமுடன் இணைந்து அமைத்த இணைப்பாட்டம் எங்களுக்கு பெரியளவில் உதவியது"- என்றார். (எ)

# நெதர்லாந்தை வீழ்த்தி இந்தியா அபார வெற்றி

புவனேஷ்வர், பெப்.27

மகளிர் புரோ ஹொக்கி லீக் தொடரில் நெதர்லாந்தை வீழ்த்தி இந்தியா அபார வெற்றி பெற்றது.

6ஆவது புரோ ஹொக்கி லீக் போட்டி பல்வேறு நாடுகளில் நடைபெற்று வருகிறது. இதில் இந்தியாவின் புவனேஷ்வரில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஆட்டம் ஒன்றில் இந்தியா, நெதர்லாந்துடன் மோதியது.

பரபரப்பான இந்த ஆட்டத்தில் வழக்கமான நேரம் முடிவில் ஆட்டம் 2 - 2 என்ற கோல் கணக்கில் சமனானது. இதையடுத்து வெற்றி தோல்வியை நிர்ணயிக்க ஷூட்-அவுட் விதி கடைப்பிடிக்கப்பட்டது. இதில் இந்தியா அபாரமாக செயல்பட்டு 2 - 1 என்ற கோல் கணக்கில் நெதர்லாந்தை தோற்கடித்தது.(எ)

# ரூப்லெவ் தோல்வி!



டுபாய், பெப்.27

டுபாய் ஓபின் ரென்னிஸ் தொடரில் முன்னணி வீரரான ஆண்ட்ரே ரூப்லெவ் அதிர்ச்சி தோல்வியடைந்தார்.

ஐக்கிய அரபு அமீரகத்தில் டுபாய் ஓபின் ரென்னிஸ் தொடர் நடைபெற்று வருகிறது. இதில் நேற்று நடைபெற்ற ஆண்கள் ஒற்றையர் பிரிவு முதல் சுற்றில் ரஷ்யாவின் ஆண்ட்ரே ரூப்லெவ், பிரான்ஸின் குயிண்டின் ஹேலிஸுடன் மோதினார்.

பரபரப்பான இந்த ஆட்டத்தில் தொடக்கம் முதலே ஆதிக்கம் செலுத்தி சிறப்பாக விளையாடிய குயிண்டின் ஹேலிஸ் 3 - 6, 6 - 4, 7(7)-6(5) என்ற செட் கணக்கில் வெற்றி பெற்றார். தோல்வியடைந்த ஆண்ட்ரே ரூப்லெவ் தொடரிலிருந்து வெளியேறினார். (எ)

# ஆறு விக்கெட்களால் டில்லி அணி வெற்றி

பெங்களூரு, பெப்.27

மகளிர் பிரீமியர் லீக் தொடரில் குஜராத் அணியை வீழ்த்தி டில்லி அணி வெற்றி பெற்றது.

இந்தியாவில் நடைபெற்று வரும் இந்தத் தொடரில் நேற்று லீக் ஆட்டம் ஒன்றில் டில்லி கப்பிட்டல்ஸ் - குஜராத் ஜெயண்ட்ஸ் அணிகள் மோதின. இதில் முதலில் துடுப்பெடுத்தாடிய குஜராத் அணி, 20 ஓவர்களில் 9 விக்கெட்கள் இழந்து 127 ஓட்டங்கள் மட்டுமே எடுத்தது. குஜராத் தரப்பில் அதிகபட்சமாக பாரதி புல்மாலி 40 ஓட்டங்கள் எடுத்தார். இதையடுத்து 128 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் டில்லி துடுப்பெடுத்தாடியது.

தொடக்கம் முதல் சிறப்பாக விளையாடிய அந்த அணி 15.1 ஓவர்களில் 4 விக்கெட்கள் இழப்புக்கு 131 ஓட்டங்கள் எடுத்தது. இதனால், டில்லி அணி 6 விக்கெட்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. டில்லி அணியில் ஜெஸ் ஜோனாசென் 61 ஓட்டங்களும், ஷபாலி வர்மா 44 ஓட்டங்களும் எடுத்தனர். (எ)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாமலிடம்...

2013 ஆம் ஆண்டில் சிறீலங்கன் எயார்லைன்ஸ் 06 எயார்பஸ் ஏ-330 விமானங்களையும் 08 ஏ-350 விமானங்களையும் வாங்கியபோது எயார்பஸ் மற்றும் சிறீ லங்கன் எயார்லைன்ஸ் இடையே நடந்த முறையற்ற நிதி பரிவர்த்தனை குறித்து குற்றச்சாட்டுகள் எழுந்தன. இது தொடர்பிலேயே நாமல் ராஜபக்ஷ தற்போது விசாரிக்கப் பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## தென்னிலங்கையில்...

இதில், 36 வயதுடைய நபரே படுகாயமடைந்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார் என்று பொலிஸ் பேச்சாளர் புத்திக மனதுங்க தெரிவித்தார்.

மோட்டார் சைக்கிளில் வந்த அடையாளம் தெரியாத இருவர் துப்பாக்கிச் சூட்டை நடத்திவிட்டு அங்கிருந்து தப்பிச் சென்றனர். அத்துடன், துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்தவர் பாதாள உலக கும்பலைச் சேர்ந்த “கெஹெல் பத்தர பத்மே” என்று அழைக்கப்படும் மன்தினு பத்மசிறி பெரேரா ஹேவத் என்பவரின் நெருங்கிய நண்பர் என்றும் பொலிஸ் பேச்சாளர் மேலும் கூறினார்.

அண்மைநாட்களாக தென்னிலங்கையில் துப்பாக்கிச்சூட்டு சம்பவங்கள் அதிகரித்து வருகின்றன. இந்த ஆண்டில் பதிவான துப்பாக்கிச்சூட்டு சம்பவங்களின் எண்ணிக்கை 18ஆக அதிகரித்துள்ளது. (ஐ)

## ரணில்...

முன்னாள் பிரதமர் டோனி அபொட் ஆகியோரும் கலந்துகொள்ளவுள்ளனர்.

இதன் போது தெற்காசியா தொடர்பில் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சிறப்புரையாற்றவுள்ளார்.

அத்துடன், இந்தப் பயணத்தில் இந்திய பிரதமர் நரேந்திர மோடியையும் மற்றும் இந்தியாவின் முக்கிய தொழிலதிபர்களையும் ரணில் சந்திக்கவுள்ளார். குறுகிய காலத்துக்குள் ரணிலின் இரண்டாவது இந்திய பயணமாக இது அமைந்துள்ளது என்பதும் சுட்டிக்காட்டத்தக்கது.

## பெருந் துடுப்பாட்ட...

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி, சென். ஜோன்ஸ் கல்லூரி அணிகள் மோதும் 118ஆவது பெருந்துடுப்பாட்ட போட்டி, பொன் அணிகளின் போர் என்று வர்ணிக்கப்படும் சென். பற்றிக்ஸ் கல்லூரி, வட்டுக்கோட்டை யாழ்ப் பாண கல்லூரி அணிகள் மோதும் 108 ஆவது பெருந் துடுப்பாட்டப் போட்டி ஆகியவையே இவ்வாறு ஒத்திவைக்கப் பட்டுள்ளன.

வடக்கின் பெரும் போர் துடுப்பாட்டப் போட்டி எதிர்வரும் 6, 7, 8ஆம் திகதிகளில் யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெறும் என்று அறிவிக்கப் பட்டுள்ளது.

இதேசமயம், பொன் அணிகளின் போர் துடுப்பாட்டப் போட்டி தொடர்பில் பின்னர் அறிவிக்கப்படும் என்று போட்டியை நடத்தும் பாடசாலைகள் அறிவித்துள்ளன. (ஐ)

## உள்ளக பொறிமுறையை...

மதங்களை சேர்ந்த மக்கள் ஒன்றிணைந்து எமது தலைமையிலான அரசாங்கத்தைத் தெரிவு செய்தனர்.

தற்போதைய பாராளு மன்றம் வரலாற்று சிறப்பு மிக்கது. அதிக பெண்கள் மற்றும் பல்வேறு சமூகங்களை சேர்ந்த பிரதிநிதிகள், மலையக சமூ கத்தை சேர்ந்த இரு பெண்கள், மாற்றுத்திறனாளி பெண் என சகல தரப்பினரையும் பிரதிபலிக்கிறது.

தற்போது நாட்டின் பொருளாதாரம் உறுதியடைந்துள்ளது. இதனை, சகலருக்குமான சம பங்கீட்டை உறுதிப்படுத்தக்கூடிய பொருளாதாரமாக நிலைமாற்றமடையச்செய்வதை நோக்கி நாம் பயணிக்கிறோம்.

எமது அரசாங்கம் சமர்ப்பித்துள்ள 2025ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தில் சமூகப் பாதுகாப்பு செயல் திட்டங்களுக்கு அதிகளவான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருப்பதன் ஊடாக நெருக்கடிக்கு முகங்கொடுத்திருக்கும் மக்களுக்கான நிவாரணத்தை வழங்கியிருக்கிறோம்.

அதுமாத்திரமின்றி, மோதலால் பாதிக்கப்பட்ட வடக்கு, கிழக்கு மாகாணங்களில் சமூக - பொருளாதார நிலைமைகளை மேம்படுத்தவும் மீள்குடியேற்றம், வீட்டுவசதி, இழப்பீடு மற்றும் உள்கட்டமைப்பு மேம்பாடு போன்ற முக்கியமான தேவைகளை நிவர்த்தி செய்வதற்கும் சிறப்பு கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

வடக்கு, கிழக்கில் உள்கட்டமைப்பை மேம்படுத்துதல், வாழ்வாதாரங்களை• ஆதரித்தல் மற்றும் தொழில்களை மேம்படுத்துதல், இணைப்பை மேம்படுத்துதல் மற்றும் பிராந்திய வளர்ச்சியை ஆதரித்தல் ஆகியவற்றை நோக்கமாகக் கொண்டு அரசாங்கம் தீவிரமாக செயல்பட்டு வருகிறது.

ஜனாதிபதியால் அறிமுகப்படுத்தப் பட்டுள்ள தூய இலங்கை (கிளீன் சிறீ லங்கா) செயல்திட்டத்தின் ஊடாக நேர்மைத்தன்மை வாய்ந்ததும் பொறுப்புக்கூறத்தக்கதுமான ஆட்சி நிர்வாக முறைமையை நாட்டில் கட்டியெழுப்ப உத்தேசித்துள்ளோம். தேசிய ஒற்றுமை, நல்லிணக்கத்தை மேலும் முன்னேற்றத்தை இலக்காகக் கொண்டு அரசாங்கம் அர்ப்பணிப்புடன் செயலாற்றும்.

இதன்பிரகாரம், காணாமல் போனோர் பற்றிய அலுவலகம் (ஓ. எம். பி.) இழப்பீட்டுக்கான அலுவலகம், தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்க அலுவலகம் உள்ளிட்ட உள்ளக பொறிமுறைகள் மேலும் வலுப்படுத்தப்படும். அவற்றின் சுயாதீனம் - நம்பகத்தன்மை வாய்ந்த முறைமையிலான இயங்குகை என்பன உறுதிப்படுத்தப்படும்.

சகல தரப்பினரதும் நம்பிக்கையை வென்றெடுக்கக்கூடியவகையில் உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக் குழு தொடர்பான கலந்துரையாடல்கள் சம்பந்தப்பட்ட சகல தரப்பினரையும் உள்ளடக்கி முன்னெடுக்கப்படும்.

உள்நாட்டு பொறிமுறைகளை அரசமைப்பு கட்டமைப்புக்குள் நம்பகமானதாகவும் உறுதியானதாகவும் மாற்றுவதே எங்கள் நோக்கம்.

இனவெறி மற்றும் மத தீவிரவாதத்தால் ஏற்படும் வன்முறைச் செயல்களை விசாரிக்க அதிகாரம் பெற்ற உண்மை மற்றும் நல்லிணக்க ஆணையத்தை நோக்கிய பணிகளை வலுப்படுத்துவது இதில் அடங்கும்.

நல்லிணக்கத்தை நோக்கி கடந்த சில மாதங்களில் நம்பிக்கையை வளர்க்கும் பல நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளன. நவம்பர் 2024இல், பலாலி - அச்சுவேலி பிரதான வீதி உட்பட வடக்கு மாகாணத்தில் பல வீதிகள் பல தசாப்தங்களுக்குப் பிறகு பொதுமக்களின் பயன்பாட்டுக்காகத் திறக்கப்பட்டன. வடக்கு இளைஞர்களை பாதுகாப்பு சேவையில் பங்கேற்க ஜனாதிபதி அழைப்பு விடுத்துள்ளார்.

வடக்கு, கிழக்கு மாகாண மக்கள் உட்பட மக்களின் ஆணையுடன் சேர்ந்து நமது அனைத்து குடிமக்க ளுக்கும் ஒரு நீதியான, நியாயமான மற்றும் வளமான சமூகத்துக்கான, அவர்களின் அபிலாசைகளை நிறை வேற்றுவதற்கான பொறுப்பை அர சாங்கம் முழுமையாக அறிந்திருக்கிறது. தேசிய ஒற்றுமை மற்றும் நல்லிணக்கம் மற்றும் உள்ளடக்கிய வளர்ச்சியை நோக்கி நாம் முன்னேறும்போது, சர்வ தேச சமூகத்தின் தொடர்ச்சியான ஊக்கமும் ஆதரவும் முக்கியமானதாக இருக்கும்.

நாட்டின் தேசிய சட்டதிட்டங்களுக்கு அமைவாக நாம் தொடர்ந்து ஐ. நா. மனித உரிமைகள் பேரவை உள்ளடங்கலாக ஐ. நா. சபையின் சகல அமைப்புகளுக்கும் உபகுழுக்களுக்கும் ஒத்துழைப்புகளை வழங்குவோம் - என்றார். (ஐ)

## ஷெல்...

நாட்டின் எரிபொருள் சந்தையில் நுழையும் 4ஆவது நிறுவனம் இதுவாகும். ஆர். எம். பார்க்ஸ் நிறுவனம் நாடு முழுவதும் 150 எரிபொருள் நிலையங்களை திறப்பதற்கு அனுமதி பெற்றுள்ளது. 2023ஆம் ஆண்டு இதற் கான அனுமதி வழங்கப் பட்டது. (ஐ)

## வட, கிழக்கில்...

உருவாகிய காற்றுச் சுழற்சி தற்போது இலங்கைக்கு தென்கிழக்கு திசையில் 792 கி.மீ. தொலைவில் காணப்படுகின்றது. இது மேலும் மேற்கு திசை நோக்கி நகரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதனால், தற்போது வடக்கு, கிழக்கு மாகாணங்களின் பல பகுதிகளுக்கும் கிடைக்கும் மழை எதிர்வரும் மார்ச் 3 வரை நீடிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இன்று வியாழக்கிழமை முதல் மழை சற்று தீவிரமடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதேவேளை உருவாகியுள்ள காற்றுச் சுழற்சி ஈரப்பதன் நிறைந்த காற்றை உள்ளிழுப்பதன் காரணமாக அடுத்த சில நாட்களுக்கு வடக்கு, கிழக்கு மாகாணங்களில் காற்று வேகமாக குறிப்பாக மணிக்கு 30 முதல் 50 கி.மீ. வேகத்தில் வீசக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதேவேளை வடக்கு, கிழக்கு மாகாணங்களின் கரையோர பகுதிகளில் காற்று மணிக்கு 40 முதல் 60 கி. மீ. வேகத்தில் வீசக்கூடும்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களின் கடற்பகுதிகள் கொந்தளிப்பான நிலையில் காணப்படும் என்பதனால் மீனவர்கள் கடலுக்கு செல்வதில் அவதானமாக இருப்பது அவசியம். வடக்கு, கிழக்கு மாகாணங்களின் பல பாடசாலைகளில் தற்போது விளையாட்டு போட்டி நிகழ்வுகள் இடம்பெறுகின்றன. ஆனால் எதிர்வரும் மார்ச் 3ஆம் திகதி வரை மழையுடன் கூடிய வானிலை நிலவும் என்பதனைக் கருத்தில் கொண்டு விளையாட்டு போட்டிகளை ஏற்பாடு செய்வது சிறந்தது. - என்றும் குறிப்பிட் டுள்ளார்.

## 9கட்சிகளின்...

பசுமை இயக்கம் கூட்டணியில் இணைவது தொடர்பில் முடிவு எடுக்கப்படவில்லை என்று அறிவித்துள்ளது. இந்த நிலையில், தமிழ் மக்கள் கூட்டணியும் தங்களின் முடிவு இன்று அல்லது நாளையே அறிவிக்கப்படும் என்று கூறியுள்ளது.

ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியில் ரெலோ, புளொட், ஈ. பி. ஆர். எல். எவ்., ஜனநாயக போராளிகள், தமிழ்த் தேசியக் கட்சி என்பன அங்கம் வகித்து வருகின்றன. இந்த நிலையில், நடைபெறவுள்ள உள்ளூராட்சி சபைத் தேர்தலில் தமிழ் மக்கள் கூட்டணி, தமிழ்த் தேசிய பசுமை இயக்கம், ஜனநாயக தமிழரசு கட்சி, சமத்துவ கட்சி என்பவற்றையும் இணைத்து போட்டியிடுவது தொடர்பில் கலந்துரையாடப்பட்டது.

இது தொடர்பான முதல் கூட்டம் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் 9 கட்சிகளின் தலைவர்கள் - பிரதிநிதிகள் இணைந்து தேர்தலை சந்திப்பது தொடர்பில் கலந்துரையாடினர். இதைத் தொடர்ந்து கூட்டணி தொடர்பான அறிவிப்பு வெளியானது. இந்த நிலையில், தமிழ்த் தேசிய பசுமை இயக்கம் இது விடயத்தில் தாம் இன்னமும் முடிவு எடுக்கவில்லை என்று அறிவித்தது.

இந்த நிலையில், நேற்று புதன்கிழமை திருநெல்வேலியில் கூட்டணி கட்சியினர் கூடினர். இந்தக் கூட்டத்துக்கு தமிழ்த் தேசிய பசுமை இயக்கத்தின் சார்பில் எவரும் பங்கேற்கவில்லை. பங்கெடுத்த தமிழ் மக்கள் கூட்டணியின் பிரதிநிதியான வி. மணிவண்ணன், “கூட்டணியில் இணைவது தொடர்பில் கட்சியின் பொதுச் செயலாளரே முடிவு எடுக்க வேண்டும். அந்த முடிவு இரண்டொரு நாட்களில் வெளியிடப்படும்”, என்று கூறியுள்ளார். (ஐ)

## இந்திய...

ஜனாதிபதிக்கு மனு ஒன்றை கையளிக்கவுள்ளனர்.

இதேவேளை, இந்திய மீனவர்கள் கைதைக் கண்டித்து தமிழ்நாடு - இராமேஸ்வரம் மீனவர்கள் காலவரை யறையற்ற புறக்கணிப்பு போராட்டத் தில் ஈடுபட்டுள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## 12ஆயிரம்...

ஒழுங்கமைக்கப்பட்ட குற்றக் குழுக்களில் இணைந்து இயங்கி வருகின்றனர் என்று கண்டறியப்பட்டுள்ளது.

இவ்வாறான குற்றச் செயல்களில் ஈடுபடுவோரை கைது செய்யும் நடவடிக்கை தீவிரப்படுத்தப்பட்டுள்ளது என்று படைத் தரப்பு அறிவித்துள்ளமை தெரிந்ததே. (ஐ)

## யாழ்.போதனா...

அறிக்கையில் தெரிவிக்கப்பட்டவை வருமாறு,

நோயாளிகளின் பாதுகாப்பை உறுதி செய்யத் தவறியமை, யாழ். போதனா மருத்துவமனையின் நிர்வாகத்தைத் தக்க வைப்பதற்காக மருத்துவமனை ஊழியர்களிடையே தொடர்ந்தும் சர்ச்சைகளை உருவாக்கும் முயற்சிகளை மருத்துவமனையின் பணிப்பாளர் மேற்கொண்டு வருவதை எதிர்த்து தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபட நாம் தீர்மானித்துள்ளோம்.

நாங்கள் தொடர்ச்சியாக யாழ். போதனா மருத்துவமனை நிர்வாகத்தோடு இரண்டு மாதங்களாக கலந்துரையாடி வந்த நிலையிலும் நோயாளர்களின் பாதுகாப்பை யாழ். போதனா மருத்துவமனை நிர்வாகம் உறுதி செய்யத் தவறியமையால், தொழிற்சங்க நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்கு நாம் தள்ளப் பட்டுள்ளோம் என்பதை மனவருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

பின்வரும் காரணங்களுக்காகவே நாம் எமது தொழில்சங்க நடவடிக்கையை மேற்கொள்ளவுள்ளோம்.

நோயாளர் அவசர சேவைகளுக்கான பிரிவுகளுக்கு ஆளணி பற்றாக்குறையாகவும் அதேநேரம், சாதாரண பிரிவுகளுக்கு அதிகமான ஆளணியும் பொருத்தப்பாடற்ற விதத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்டு இருப்பதனால் நோயாளரின் உயிருக்கு உத்தரவாதம் இல்லாமல் உள்ளது, யாழ் போதனா மருத்துவமனை நிர்வாகத்தின் தனிப்பட்ட விருப்பு வெறுப்புகளுக்காக விபத்து, அதி தீவிர சிகிச்சைப் பிரிவில் ஓர் ஆபத்தான பணியாளரை பொறுப்பிலிருத்தி, அர்ப்பணிப்பான பணியாளரை இடம் மாற்றியுள்ளமை நோயாளிகளின் உயிராபத்துக்கு ஏதுவான பாதகமான நிலைமையை உருவாக்கியுள்ளது.

சில ஊழியர்களின் பொறுப்புணர்ச்சி அற்ற நடவடிக்கைகள் தொடர்பாக மருத்துவ நிபுணர்கள் சுட்டிக் காட்டிய போதும் அவர்களை திருத்துவதற்கு இதுவரை எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை, தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் மூலம் மருத்துவ நிபுணர்களால் தகவல்கள் கோரப்படும் போது தவறான தகவல்களை வழங்குவதுடன் தகவல்களை வழங்குவதில் தாமதம் செய்தல், மருத்துவமனையில் ஆபத்தான நிலையில் உள்ள அனைத்து நோயாளிகளினதும் பாதுகாப்பை உறுதி செய்யும் வரை தொழிற்சங்க நடவடிக்கையாக, அதிதீவிர சிகிச்சை தவிர்ந்த சாதாரண பணிகளையும் இடை நிறுத்த முடிவு செய்துள்ளோம்.

இது நோயாளரின் நலன் கருதி எடுக்கப்பட்டுள்ள முடிவு என்பதனால் நீண்டகால நோக்கிலான சரியான முடிவுகள் எட்டப்படும் வரை தொழில்சங்க நடவடிக்கையைத் தொடர வாய்ப்புள்ளது. இதனால் யாழ். போதனா மருத்துவமனையில் அவசர சிகிச்சைகள் தவிர்ந்த ஏனைய சிகிச்சைகள் தற்காலிகமாக இடைநிறுத்தப்படும் என்பதனை மன வருத்தத்துடன் நாம் தெரிவித்துக் கொள்கின்றோம் - என்றுள்ளது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# ஜப்பான் பிரதி அமைச்சரை சந்தித்தார் அமைச்சர் விஜித



கொழும்பு, பெப். 27

இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத்துக்கும் ஜப்பான் வெளிவிவகார பிரதி அமைச்சர் அகிகோ இகுவினாவுக்கும் இடையிலான சந்திப்பு ஜெனிவாவில் நேற்று புதன்கிழமை இடம்பெற்றது.

வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் ஐக்கிய நாடுகள் பேரவையின் கூட்டத்தொடரில் பங்கேற்பதற்காக ஜெனிவாவுக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டுள்ள நிலையில், இந்த சந்திப்பு இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# 5 வருடங்களுக்கு பின் நாட்டை வந்தடைந்துள்ள வாகனங்கள்!

கொழும்பு, பெப். 27

நாட்டின் தனியார் பயன்பாட்டிற்காக இறக்குமதி செய்யப்பட்ட முதல் தொகுதி வாகனங்கள் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்தன.

இலங்கை அரசாங்கம் கடந்த ஐந்து வருட இடைவெளிக்குப் பிறகு இறக்குமதி கட்டுப்பாடுகளைத் தளர்த்த எடுத்த முடிவைத் தொடர்ந்து இவ்வாறு முதல் தொகுதி வாகனங்கள் வந்தடைந்தன.

பொருளாதாரக் கட்டுப்பாடுகள் காரணமாக 2020 ஆம் ஆண்டில் விதிக்கப்பட்ட நீண்ட கால இறக்குமதித் தடையால் கடுமையாகப் பாதிக்கப்பட்டிருந்த நாட்டின் வாகனத் துறையில் இந்த நடவடிக்கை ஒரு குறிப்பிடத்தக்க மைல்கல்லைக் குறிக்கிறது.

கோவிட்-19 தொற்று நோயால் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி காரணமாக 2021ஆம் ஆண்டில் வாகன இறக்குமதியை நிறுத்த அப்போதைய இலங்கை அரசாங்கம் முடிவு செய்திருந்தது.

கடுமையான பொருளாதார நெருக்கடி தொடர்ந்து நீடித்ததால், வாகன இறக்குமதி மீதான கட்டுப்பாடுகளை மேலும் தொடர அதிகாரிகள் முடிவு செய்தனர். (அ)

# நாகை - காங்கேசன் கப்பல் சேவை 3 நாள் தற்காலிக இடைநிறுத்தம்!

கொழும்பு, பெப். 27

தமிழ்நாட்டின் நாகை - காங்கேசன்துறை ‘செரியா பாணி’ பயணிகள் கப்பல் போக்குவரத்து சேவை தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது.

அதன்படி நாகை - காங்கேசன்துறை இடையே கப்பல் போக்குவரத்து நேற்று முதல் நாளை வரை கப்பல் போக்குவரத்து தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது. மார்ச் முதலாம் திகதி முதல் கப்பல் போக்குவரத்து வழக்கம்போல் நடைபெறும் என கப்பல் நிறுவனம் தெரிவித்துள்ளது.

தமிழ்நாட்டின் நாகை துறைமுகத்திலிருந்து காங்கேசன்துறை துறைமுகம் வரை இந்தியா - இலங்கை இடையே கடந்த 2023ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 14 ஆம் திகதி ‘செரியா பாணி’ என்ற பயணிகள் கப்பல் இயக்கப்பட்டது.

பின்னர் வடகிழக்கு பருவமழை தீவிரமடைந்த நிலையில் பாதுகாப்பு காரணமாக கடந்த சில மாதங்களுக்கு முன் சேவை தற்காலிமாக நிறுத்தப்பட்டது.

இந்நிலையில் மீண்டும் கப்பல் போக்குவரத்து இம்மாதம் 22 ஆம் திகதி ஆரம்பமாகிய நிலையில் தமிழ்நாட்டில் 28 ஆம் திகதி வரை பலத்த மழை பெய்யும் என்று வானிலை ஆய்வு மையம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

நாகை - காங்கேசன் இடையே நீண்ட நாள் இடைவெளிக்குப் பிறகு கப்பல் போக்குவரத்து தொடங்கி 4 நாட்கள் நடைபெற்ற நிலையில் மீண்டும் 3 நாட்களுக்கு ரத்து செய்யப்பட்டுள்ளமை பயணிகள் மத்தியில் ஏமாற்றத்தை ஏற்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

## வெளிநாட்டு உதவியை நிறுத்திய அமெரிக்கா

# முக்கியமான திட்டங்கள் இலங்கையிலும் பாதிப்பு!



கொழும்பு, பெப். 27

**அமெரிக்கா, வெளிநாடுகளுக்கான உதவியை நிறுத்தியிருப்பது இலங்கையில் பல முக்கியமான திட்டங்களைப் பாதிக்கிறது என இலங்கைக்கான ஐக்கிய நாடுகள் சபையின் வதிவிட பிரதிநிதி மார்க் - ஆண்ட்ரே பிரஞ்ச் தெரிவித்துள்ளார்.**

அவற்றில் உணவுப் பாதுகாப்பு, பொருளாதார சீர்திருத்தங்கள், ஜனநாயக நிர்வாகம், ஊழல் எதிர்ப்பு, எல்லைப் பாதுகாப்பு மற்றும் புலம்பெயர்வு முகாமைத்துவம் போன்ற திட்டங்களும் அடங்குவதாக அவர் குறிப்பிட்டார்.

அமெரிக்காவின் உதவி இலங்கையின் வருடாந்த பாதீட்டு திட்டத்தில் சுமார் 12 சதவீதத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துவதாகவும் இலங்கைக்கான ஐக்கிய நாடுகள் சபையின் வதிவிட ஒருங்கிணைப்பாளர் மார்க் - ஆண்ட்ரே பிராஞ்ச் கூறியுள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப் தனது நாடு ஐக்கிய நாடுகள் சபையில் அமெரிக்காவின் நிதி மற்றும் ஈடுபாடு குறித்த பொதுவான மதிப்பாய்வை மேற்கொள்ள வேண்டுமென அறிவித்தார்.

மேலும், ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையிலிருந்து அமெரிக்கா விலகுவதாகவும் டொனால்ட் ட்ரம்ப் குறிப்பிட்டிருந்தார்.

இந்த நிலையில் அமெரிக்கா தமது முடிவை மீள் பரிசீலனை செய்யும் என எதிர்பார்ப்பதாகவும், அமெரிக்கா உலக அமைப்பின் முன்னணி பங்காளி எனவும் இலங்கைக்கான ஐக்கிய நாடுகள் சபையின் வதிவிட பிரதிநிதி மார்க் - ஆண்ட்ரே பிராஞ்ச் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, யு.எஸ்.எய்ட்டின் நிதி முடக்கல் காரணமாக இலங்கையின் அரச துறையும் கடுமையாகப் பாதிப்படைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

2019ஆம் ஆண்டு முதல் இலங்கையில் சுமார் 160 மில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான திட்டங்களுக்கான ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டுள்ளது.

அவற்றில் பெரும்பாலானவை முன்னாள் ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேனவின் ஆட்சிக் காலத்தில் கைச்சாத்தானதாகத் தெரிவிக்கப்படுகிறது. (அ)

# இராமேஸ்வரம் - தலைமன்னார் இடையே மற்றுமொரு கப்பல் சேவை ஜுலையில்?

சென்னை, பெப். 27

இந்தியாவின் தமிழகத்துக்கும் இலங்கைக்கும் இடையே மற்றுமொரு பயணிகள் கப்பல் சேவையை முன்னெடுப்பது தொடர்பில் ஆராயப்படுகிறது.

எதிர்வரும் ஜூலை மாதம் முதல் இந்த கப்பல் சேவையை ஆரம்பிப்பது தொடர்பில் ஆராயப்படுவதாக இந்திய ஊடக தகவல்கள் தெரிவிக்கின்றன.

குறித்த கப்பல் சேவை இராமேஸ்வரத்திலிருந்து தலைமன்னார் வரையில் முன்னெடுக்கப்படவுள்ளது.

ஒரு மணிநேரத்தில் 250 பயணிகள் பயணிக்கக் கூடிய வகையிலான கப்பல் சேவையை இயக்குவதற்கான விருப்பம் வெளியிடப்பட்டுள்ளதாகத் தமிழக கடல்சார் சபை தெரிவித்துள்ளது.

இதற்காக இராமேஸ்வரத்தில் தற்காலிக பயணிகள் முனையம் ஒன்று நிர்மாணிக்கப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. அத்துடன் அங்கு சுங்க சோதனைச் சாவடியை அமைப்பதற்கும் இந்திய மத்திய அரசிடம் அனுமதி கோரப்பட்டுள்ளது.

இதேவேளை, குறித்த கப்பல் சேவை இரு நாடுகளுக்கும் இடையிலான வர்த்தக உறவுகளின் கடந்த கால பொறுமையை மீட்டெடுக்கும் எனத் தமிழக கடல்சார் சபையின் பிரதம நிறைவேற்று அதிகாரி எம்.வள்ளலார் தெரிவித்துள்ளார்.

அத்துடன் இந்த பயணிகள் கப்பல் சேவையின் ஊடாக சுற்றுலாப் பயணிகளின் வருகை அதிகரிக்கும் எனவும் அவர் குறிப்பிட்டார். (அ)

# கிளிநொச்சியில் அதிபர், ஆசிரியர்கள் பாதுகாப்பு கோரி அரச அதிபருக்கு மனு

கிளிநொச்சி, பெப். 27

கிளிநொச்சி மாவட்டத்தில் கடமையாற்றும் அதிபர் ஆசிரியர்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்துமாறு கோரி கிளிநொச்சி மாவட்ட அதிபர் சங்கம் சார்பில் மாவட்ட அரச அதிபருக்கு மனு ஒன்று கையளிக்கப்பட்டுள்ளது.

அண்மைய நாட்களில் கிளிநொச்சி மாவட்டத்தில் அதிபர் ஆசிரியர்களை இலக்கு வைத்து அதிகரித்து வரும் வழிப்பறிக் கொள்ளைகள் மற்றும் தாக்குதல்களை கண்டித்த பிரதிநிதிகள், தங்களது பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறு கோரியுள்ளனர்.

அண்மையில்கிளிநொச்சி பூநகரி பகுதியைச் சேர்ந்த ஒரு பாடசாலை அதிபர் பாடசாலை பணிகள் முடிந்து வீடு திரும்பும்போது, பூநகரி சங்குப்பிட்டி வீதியில் தாக்கப்பட்டு உயிரிழந்தார்.

மேலும், கடந்த 23 ஆம் திகதி கிளிநொச்சி திருவையாறு பகுதியில் ஒரு ஆசிரியரின் தங்கச் சங்கிலி திருடப்பட்ட சம்பவமும் அண்மையில் பதிவாகியுள்ளதுடன், இதற்கு எதிர்ப்பு தெரிவித்து அதிபர் சங்கம் மாவட்ட அரச அதிபருடன் கலந்துரையாடி, உரிய பாதுகாப்பு பெற்றுத் தருமாறு கோரியுள்ளனர்.

இவை தொடர்பாக கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் சு. முரளிதரன், இந்த சம்பவங்களின் குறித்து பொலிஸாருடன் மற்றும் பாதுகாப்பு தரப்புடன் கலந்துரையாடல் நடத்த திட்டமிட்டுள்ளதாக தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# நெல் கொள்வனவுக்காக கடன்களை வாங்கிய ஆலை உரிமையாளர்கள்!

கொழும்பு, பெப். 27

பாரிய அளவிலான நெல் ஆலை உரிமையாளர்கள் பலர் நெல் கொள்வனவுக்காக 15 பில்லியன் ரூபாய்க்கு அதிகமாக வங்கிக் கடன்களைப் பெற்றுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதன் காரணமாக, நெல் கொள்வனவுக்காக பெற்ற கடன்களை ஆலை உரிமையாளர்கள் வேறு நோக்கங்களுக்காகப் பயன்படுத்துகிறார்களா என்பதை விசாரிக்க அதிகாரிகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

நெல் கொள்முதல் செய்வதற்காக ஆலை உரிமையாளர்களுக்கு வழங்கப்படும் கடன் வசதிகளின் கீழ் வாங்கப்பட்ட நெல்லின் அளவு குறித்து பின்தொடர்தல் நடத்தவும் அரசாங்கம் தயாராகி வருகிறது.

சில நெல் ஆலை உரிமையாளர்கள் நெல் வாங்குவதற்காக பெற்ற கடன்களை வேறு நோக்கங்களுக்காகப் பயன்படுத்துவதாக தகவல் கிடைத்துள்ளதால் இது குறித்து விசாரிக்க அதிகாரிகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இதேவேளை, அரிசி பற்றாக்குறை ஏற்படாமல் பார்த்துக் கொள்ளுமாறு அதிகாரிகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 27.02.2025 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org